# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்)

என் சகோதரர்களே! இச்சன்மம் முந்திய சன்மங்களால் உண்டானதென்று சாஸ்திரங்கள் சொல்வது உண்மையே. முன் சன்மங்களிற் செய்த பாவங்களால் துன்பமும், துயரமும் உண்டாகின்றன. முன் செய்த புண்ணியத்தால் சுகமும், சந்தோசமும் உண்டாகின்றன. நீங்கள் விதைக்கின்றதையே அறுக்கின்றீர்கள். அதோ நிற்கும் வயல்களைப் பாருங்கள்; நெல் நெல்லாகவும், எள் எள்ளாகவும் இருக்கின்றன. அதுபோலவே மனிதனுடைய அதிஷ்டமும். தான் முன் சன்மத்தில் விதைத்ததை அறுக்க வருகிறான். அவன் முள்ளையும், விஷப்பூண்டையும் வேரோடு பிடுங்கி எறிந்து அவைகள் இருந்த இடத்தில் நல்ல விதைகளைப் போட்டு நிரப்புவானானால், பூமி சுத்தமாயும், செழிப்பாயும் இருக்கும். அறுப்புக் காலத்தில் நிரம்பக் கிடைக்கும். ஒருவன் துன்பங்களுண்டாகும் காரணத்தை அறிந்து அவைகளைப் பொறுமையுடன் சகித்து தன்னால் கூடிய வரையிலும் பிறருக்கு அன்பும், உண்மையுமே கொடுத்து அதனால் தான் முன் செய்த தீமைகளை ஒருவாறு நிவர்த்தி செய்ய முயன்று ஒருவர்க்கும் அணுவளவும் துன்பம் செய்யாது தன் மனதிலிருந்து பொய்யையும், ஆசையையும் ஒழித்து எதையும் தாழ்மையுடன் அனுபவித்துக் கொண்டு பிறரிழைத்த தீங்குக்குப் பதில் நன்மையே செய்து கொண்டு ஒவ்வொரு நாளும் கருணையையும், பரிசுத்தத்தையும், நியாயத்தையும், தன்மையையும், உண்மையையும் அபிவிருத்தி செய்து கொண்டு அந்த வாழ்வின் மேலுள்ள ஆசைமடியுந்தனையும் காமத்தை வேரோடு களைந்து இப்படியெல்லாமிருப்பானானால் அவன் இறக்கும்பொழுது ஒப்புவிக்கும் வாழ்வின் கணக்கில் தீமையொன்றுமில்லாது நன்மையே நிறைந்திருக்கும். அப்படிப் பட்டவர்கள் உங்களைப்போல் வாழ வேண்டியதில்லை; அவன் சத்தாக மனிதன் ஆனான் அக்காரியம் முடிந்துவிட்டது; அவனுக்கு இனிமேல் ஆசையென்பது கிடையாது; பாபமென்பது கிட்டவராது; இவ்வுலகத்திய இன்ப துன்பங்கள் அவனது நித்தியானந்தத்தைக் கலைக்கமாட்டா; சனன மரணங்கள் திரும்பி வாரா; அவன் நிர்வாணத்தை அடைகிறான்; அவன் உயிருடன் ஒன்றாகி விடுகிறான்; ஆயினும் வாழ்வு இல்லை; ஓம் மணிபத்மே! ஹம் ஓம் பனித்துளிக் கடலில் விழுந்து விட்டது.

இதுதான் கர்மமென்று சொல்லப்படுவது; அறிந்து கொள்ளுங்கள். பாபமாகிற அழுக்கெல்லாம் போய் எண்ணெய் செலவழிந்து நின்றுவிட்ட தீபம்போல் வாழ்வும் நிற்கிற வரையில் மரணமும் நிற்கிறதில்லை. முன் சன்மங்களிற் செய்து அனுபவியாத காமமெல்லாம் கூட்டமாகக் கூடி இந்த சன்மத்தில் வந்து பிறக்கிறது. பட்டுப் பூச்சி பட்டு நெய்து அதில் வசிப்பதுபோல் இதுவும் தனக்குச்சரியான இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொள்கிறது. பாம்பின் முட்டை பொரித்ததும் விஷப்பற்களையும் உண்டாக்கிக் கொள்வது போல் அதுவும் தனக்குத் தகுந்த குணமும் தொழிலும் செய்து கொள்கிறது. மேலும் இக்கர்மம் உதவி புரியவோ, கெடுதல் செய்யவோ காரணமாகிறது. கொடிய கொலை பாதகன் இறக்கும்பொழுது அவன் செய்த பாபம் பூமியில் திரிந்து போகுமிடமெங்கும் வியாதியையும், துன்பத்தையும் விர்த்தி பண்ணிக்கொண்டுபோகிறது. ஆனால் நல்லவர்களும், நியாயவான்களும் இறக்கும்பொழுது சுகமான காற்று வீசி உலகம் செழிக்கிறது. அதுபோலவே இ[illegible]வலத்தவர் செய்யும் புண்ணியம்களால் இவ்வுலகத்திற் பின் வருபவர் இவர்களினும் சுகமாக வாழ்ந்து இன்னும் நல்லவர்களாயிருப்பார்கள். இவர்கள் செய்யும் பாபத்திற்குத் தக்கபடி துன்பமும், தீமையும் கலந்திருக்கும். ஆயினும் கல்பம் முடிவதற்குள் அன்பே எல்லாருக்கும் அரசாக ஆகும்.

புத்தியினால் வெட்டப்பட்டு, சாந்தத்தினால் மிருதுவாக்கப்பட்ட நடுவான வழியைப் பிடித்து நிர்வாணத்திற்குக் கொண்டு சேர்க்கும் உயர்ந்த பாதையில் நடக்க விரும்புபவர்கள் நான்கு உண்மைகளைக் கேட்கட்டும். முதல் உண்மை துன்பம். நீங்கள் மிக விலை மதிக்கும் இவ்வாழ்வு ஓர் பெரிய துயரம். அதன் கஷ்டங்கள் தான் சாசுவதமானவைகள். அதிலுள்ள இன்பங்களெல்லாம், ஓரிடத்திலிறங்கி உடனே திரும்பிப் பறந்து போகும் பறவைகள் போல்த்தான். பிறக்கும்பொழுதுள்ள அவஸ்தையும், பச்சைக் குழந்தையாக இருக்கும் பொழுதுள்ள கஷ்டங்களும், யௌவனத்திலுண்டாகும் துக்கங்களும், விருத்தாப்பியத்தின் வியாகுலங்களுமே உமது வாழ் நாளை நிரப்புகின்றன. அன்பான காதல் இனிமையானது தான். ஆனால் மிருதுவான ஸ்தனங்களையும், கனிவாயிதழ்களையும் சுடுகாட்டுத் தீ முத்தமிட வேண்டும். பலம் மிக சௌரியமானதே. ஆயினும் கடைசியில் பெரிய அரசர்களினதும், பிரபுக்களினதும் புயங்களை யுத்தகளத்தில் கழுகுகள் கொத்துமபடி நேரிடும். பூமி வெகு அழகாயிருக்கிறது. அதன் காட்டிலுள்ள உயிர்களெல்லாம் வாழ்வின் மேலுள்ள ஆசையால் ஒன்றையொன்று வதைக்கின்றன. ஆகாயம் நீலக்கல்போல் பிரகாசிக்கிறது. ஆயினும் பஞ்ச நாட்களில் மனிதர் பசித்து மெலிந்து ஆகாயத்தைப் பார்க்கும்பொழுது அது ஒரு சொட்டு மழையாவது கொடுப்பதில்லை. நோயாளிகளிடத்திலும், துக்கிப்பவர்களிடத்திலும், எல்லாரையும் இழந்து ஒண்டியாய்த் தடியைப் பிடித்துக் கொண்டு தள்ளாடும் கிழவனிடத்திலும் போய் வாழ்வேப்படி என்று கேளுங்கள். அவர்கள் பிறந்தவுடனே அழுகிற குழந்தை பெரிய ஞானி என்று சொல்வார்கள்.

இரண்டாவது உண்மை துன்பத்தின் காரணம்—உலகத்திலுள்ள துயரங்களில் எது தான் ஆசையினால் உண்டாகாதது? விஷயங்களும், இந்திரியங்களும் கலப்பதினால் மோகம் உண்டாகிறது. அதனால் நீங்கள் நிழல்களைக் கட்டிக் கொண்டு கனவுகளை நிசமென்று பாராட்டுகிறீர்கள். நடுவில் நான் என்ற ஒரு பொய் மனிதனை ஸ்தாபித்து அதன் சுற்றும் நிசம் போல்த் தோன்றும் ஓர் பொய்யுலகையும் ஏற்படுத்துகிறீர்கள். அதனால் அப்புறமிருக்கும் உண்மையின் சிகரங்களைக் கண்ணெடுத்துப் பார்க்க முடியாமலும், வெகு தூரத்திலின்று வரும் ஆனந்தத்தின் இனிய தொனியைக் கேட்கமுடியாமலும், இவ்விதப் பொய்த் தோற்றங்களையெல்லாம் கடப்பவனுக்காக வைக்கப்பட்டிருக்கும் மெய்யான வாழ்வை அறியாமலும் போகிறீர்கள். ஆகையால் ஆசையும், சச்சரவும் இவ்வுலகில் ஓயாத கூக்குரலை உண்டுபண்ணுகின்றன. பொய்த் தோற்றங்களைக் கண்டு ஏமாந்து போன இருதயங்கள் துக்கிக்கின்றன. பொறாமையும், கோபமும், பகையும் அதிகரிக்கின்றன. தானியங்கள் விளைய வேண்டிய இடத்தில் முட் செடிகளும், விஷவித்துக்களும் உண்டாகின்றன. நல்ல விதைகள் விழுந்து முளைப்பதற்கிடமில்லாமல் போகிறது. இப்படிப்பட்ட விஷங்களைத் தின்று மயக்கத்துடன் உயிரானது புறப்பட்டுப்போகிறது. ஆனால் கர்மத்தினாலே இன்னும் இவைகளைப் பருக வேண்டுமென்ற அவலுடன் திரும்பிவர, வந்த விடத்தில் வேறு தோற்றங்கள் அதை மயக்குகின்றன. [illegible]

# ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

3-ம் பாகம். அத்தியாயம் 4.

மகாத்மா "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது ஜீவிய சரித்திரத்தில் 3-வது அதிகாரம், 4-வது அத்தியாயம் பின் வருமாறு:—

நான் போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளிப்படுவதற்கு முன்னரே, இரண்டு நாட்களுக்குப்பிறகு என்னை மிஸ்டர் எஸ்கோம்பிடம் அழைத்துப்போனார்கள். என்னைப் பாதுகாப்பதற்காக இரண்டு கான்ஸ்டேபிள்களைக் கூடவே அனுப்பினர் ஆனால் அத்தகைய பாதுகாப்பிற்கு அவசியமே இருக்கவில்லை.

நான் கப்பலை விட்டு இறங்கிய தினத்தில் மஞ்சள் கொடியை இறக்கியதும் "நேட்டால் அட்வர்ட்டைஸர்" பத்திரிகையின் நிருபர் என்னைப் பேட்டி காணவந்தார். அவர் என்னைப் பல கேள்விகள் கேட்டார். என்மீது சுமத்தப்பட்டிருந்த பல குற்றங்களுக்கு ஆதாரமில்லையென்பதை நான் நிரூபணம் செய்தேன். ஸர் பிரோஸிஷா மேட்டா சொன்ன யோசனையை அனுசரித்து இந்தியாவில் நானிருக்கையில் பிரசங்கங்களை எழுதியே படித்தேன். அவைகளின் நகல்களும், நான் பத்திரிகைகளுக்கு எழுதியிருந்த வியாசங்களின் நகல்களும் என்னிடமிருந்தன. என்னைப் பேட்டிகாணவந்தவரிடம் இவைகளைக்கொடுத்து நான் நேட்டாலிலிருக்கையில் சொல்லாத எதையும் புதிதாக இந்தியாவில் சொல்லிவிடவில்லையென்று சொன்னேன். இரண்டு கப்பல்களில் இந்தியர்கள் வந்து சேர்ந்ததற்கும் நான் ஜவாப்தாரியில்லையென்றும் சொன்னேன். அவர்களிற்பலர் நேட்டாலிலேயேயிருந்தவர்கள். அவர்களிற் பலர் நேட்டாலில் தங்கியிருக்க விரும்பாமல் டிரான்ஸ்வாலுக்குச் சென்றுவிட விரும்பினர். அந்தக்காலத்தில் திரவியம் தேடி வருகிறவர்களுக்கு நேட்டாலைவிட டிரான்ஸ்வாலில் அதிக சௌகரியமிருந்தது. ஆகையால் இந்தியர்களிற் பலர் டிரான்ஸ்வாலுக்குச் சென்றுவிட விரும்பினர்.

### வெள்ளையர்களின் வெட்கம்.

பத்திரிகைப் பிரதிநிதியிடம் நான் இந்த விஷயங்களைச் சொல்லியதிலிருந்தும், என்னை இம்சித்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள நான் மறுத்ததிலிருந்தும் டர்பானிலுள்ள ஐரோப்பியர்களுக்கு ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டது. அவர்களுடைய நடத்தை அவர்களுக்கே வெட்கத்தை யுண்டு பண்ணியது. பத்திரிகைகள் நான் நிரபராதி என்று சொல்லி என்னைத் தாக்கியவர்களைக் கண்டிக்க ஆரம்பித்தன. கடைசியாக நான் இம்சைப்பட்டது எனக்கும், எனது கட்சிக்கும் அனுகூலமாக முடிந்தது. இதனால் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் கௌரவம் உயர்ந்து, என்னுடைய வேலை சுலுவாயிற்று. மூன்று நான்கு நாட்களில் என்னுடைய வீட்டிற்கு நான் திரும்பிப்போய் என்னுடைய தொழிலை ஆரம்பித்துக் கொண்டேன். மேலே சொன்ன சம்பவமானது என்னுடைய தொழிலுக்கும் அனுகூலமாயிற்று.

### புதிய மசோதாக்கள்.

இதனால் இந்திய சமூகத்தின் கௌரவம் உயர்ந்தபோதிலும், அதன் மீது துவேஷமும் அதிகரித்தது. இந்தியர்கள் ஆண்மைத்தனமாகப் போராடக்கூடியவர்களென்று தெரிந்ததும், அவர்கள் அது பெரிய அபாயமென்று நினைத்துவிட்டார்கள். வியாபாரிகளை வெகுவாகப்பாதிக்கக்கூடியதாகவும், குடியேறும் விஷயத்தில் கடுமையான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதாகவுமுள்ள இரண்டு மசோதாக்கள் நேட்டால் சட்டசபையில் கொண்டு வரப்பட்டன. ஆனால், ஓட்டு சுதந்திரத்திற்காக நடத்திய போராட்டத்தில் ஜாதிமத வித்தியாசங்களைப் பாராட்டக்கூடிய சட்டங்களை இயற்றக்கூடாதென்ற [illegible] மேலே சொன்ன இரண்டு சட்டங்களும் எல்லா ஜாதியினருக்கும் பிரயோகப்படுபவைகளாக இருந்தன. ஆனால், நேட்டாலிலுள்ள இந்தியர்கள் மீது அதிக நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த வேண்டுமென்பதே மசோதாக்களின் உண்மையான நோக்கம்.

இவ்விரண்டு மசோதாக்களினாலும் என்னுடைய வேலை அதிகரித்தது. இந்தியர்களும் தங்களுடைய கடமையை உணர ஆரம்பித்தனர். இரண்டு மசோதாக்களையும் இந்திய பாஷைகளில் மொழி பெயர்த்து அச்சிட்டு வழங்கினோம். இந்த மசோதாக்களின் உட்கருத்தை ஜனங்களுக்கு விளக்கினோம். குடியேற்ற நாட்டு மந்திரிக்கு விண்ணப்பம் செய்து கொண்டோம். அவர் குறுக்கிட மறுத்துவிட்டார். இரண்டு மசோதாக்களும் சட்டங்களாகிவிட்டன.

### பொது நிதி திரட்ட முயன்ற விவரம்.

பொதுவேலை என்னுடைய காலம் முழுவதையும் கவர ஆரம்பித்துவிட்டது. முன்னதாகவே டர்பானுக்கு வந்திருந்த ஸ்ரீமான் மனசுக்லால் நாஸர் என்னுடைய ஜாகையில் வந்து தங்கி, பொதுவேலையை கவனித்துக் கொண்டதால் என்னுடைய பளு ஓரளவு குறைந்தது. நான் இல்லாதகாலத்தில் ஸேத் ஆடம்ஜீமியாகான் தமது வேலையை மிகவும் நேர்மையாகச் செய்திருந்தார். அங்கத்தினர்களை அவர் அதிகமாகச் சேர்த்திருந்ததுடன் நேட்டால் இந்தியர் காங்கிரஸின் மூலதனத்திற்கும் ஆயிரம் டவுன் சேர்த்திருந்தார். மேலே சொன்ன இரண்டு மசோதாக்களாலும், கப்பல்களில் வந்த பிரயாணிகளை இம்சித்ததாலும் ஜனங்களுக்கு ஏற்பட்டிருந்த உணர்ச்சியை எனக்கு அனுகூலமாக உபயோகித்துக்கொண்டு அங்கத்தினர்கள் சேர வேண்டுமென்றும், பணங்கொடுத்து உதவ வேண்டுமென்றும் விக்ஞாபனம் செய்துகொண்டேன். அப்பொழுது 5000 பவுன் கையிலிருந்தது. காங்கிரஸுக்கு அதிகப் பணம் சேர்த்து சொத்துவாங்கி அதன் வருமானத்திலிருந்து வேலையைச் செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்திவிட வேண்டுமென்று நான் உத்தேசித்தேன். ஒரு பொது ஸ்தாபனத்தின் நிர்வாகத்தை நான் ஏற்றுக்கொண்டது இதுதான்முதல் தடவை. என்னுடைய அபிப்பிராயத்தை எனது சகாக்களிடம் சொன்னேன். அவர்களும் அதை ஒப்புக்கொண்டனர். காங்கிரஸுக்கு வாங்கியிருந்த சொத்துக்களைக் குத்தகைக்கு விட்டோம். குத்தகையாகக் கிடைத்த தொகையானது காங்கிரஸின் நடைமுதல் செலவிற்குப் போதியதாக இருந்தது. சொத்துக்களைத் தகுந்த சில டிரஸ்டிகளிடம் ஒப்புவித்தோம். அந்த சொத்துக்கள் இன்னும் இருக்கின்றன. இருந்தாலும் ஒருவருக்கொருவர் மாற்சரியங்களுக்கு இடமேற்பட்டு விட்டது. இதனால் குத்தகைத் தொகை கோர்ட்டில் குவிந்துகொண்டு வருகிறது.

### பொது ஸ்தாபனங்களை நடத்தவேண்டிய விதம்.

நான் தென்னாப்பிரிக்காவை விட்டுப் புறப்பட்ட பிறகுதான் இந்த துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் இவ்வித நிலைமை ஏற்படுமுன்னரே பொது ஸ்தாபனங்களுக்கு சாசுவதமான நிதியை ஏற்படுத்திவைக்கும் விஷயத்தில் எனக்கிருந்துவந்த அபிப்பிராயம் மாறுதலடைந்துவிட்டது. இப்பால் பல பொது ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் நான் சம்பந்தப்பட்டிருந்ததிலிருந்து அவைகளுக்கு சாசுவதமான மூலதனத்தை வைக்கக்கூடாதென்ற எண்ணம் பசுமரத்தாணிபோல் என் மனத்தில் பதிந்துவிட்டது. சாசுவதமான நிதியிருந்தால் அது அந்த ஸ்தாபனத்தின் அழிவையே தேடிவிடுகிறது. ஒரு பொது ஸ்தாபனமானது பொது ஜனங்களுடைய சம்மதத்தை அனுசரித்தும், அவர்கள் செய்யும் பொருளுதவியைக் கொண்டும் நடத்தப்பட்டு வரவேண்டும். இந்த ஸ்தாபனத்திற்குப் பொது ஜனங்களுடைய ஆதரவு போய் விட்டால் அது இருந்து வருவதற்கே நியாயமில்லை. சாசுவதமான நிதியுள்ள ஸ்தாபனங்கள் பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தை மதிக்காமல் அதற்கு விரோதமாக நடந்து வருவது அசம்பாவிதமாக இருக்கிறது. நமது தேசத்தில் இதை நாம்

(இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பிராமணரல்லாதார் முன்னேற்ற சாதனங்கள்.

பிராமணரல்லாதார் யாவரும் ஏக சகோதரர்களாய் நடந்துகொள்ள வேண்டும். பிராமணரல்லாதாருக்குள்ளேயே ஒதுக்கிவைத்திருக்கும் இனைய சகோதரர்களையும் சமமாய் பாவிக்கவேண்டும். பிராமணரல்லாதாருக்குள் ஜாதியென்ற வித்யாசமே இருக்கக்கூடாது. வரதராஜுலு நாயுடு தன்னை வரதராஜுலு என்றும், இராமசாமிநாயக்கர் தன்னை இராமசாமி என்றும், கலியாணசுந்தரமுதலியார் தன்னை கல்யாணசுந்தரம் என்றும், துரைசாமிநாடார் தன்னை துரைசாமி என்றும், சண்டபாணிபிள்ளை தன்னை சண்டபாணி என்றும் கையொப்பமிடவும் அழைக்கப்படவும் பேசப்படவும் எழுதப்படவும் சொல்லப்படவும் செய்யவேண்டும். பிராமணரல்லாதார் என்ற சமூகமே ஓர்பெரும் ஜாதியாயிருக்க அதற்குள் நான் நாயுடு ஜாதி; நான் நாயக்கர் ஜாதி; நான் முதலியார் ஜாதி; நான் நாடார் ஜாதி நான் பிள்ளை ஜாதி என்று பலதரப்பட்ட குட்டி ஜாதிகள் ஏன்? அவைகள் தேவையில்லை. பிராமணரல்லாதாருக்குள் இருக்கும் பல சமூகத்தவர்களும் இவ்வாறு நடந்துகொள்ளவேண்டும். தேசஊழிய இராமநாதன் அவர்கள், "நான் பெல்களூர் வாசி; என்னை நீங்கள் இராமநாதன்பிள்ளை என்று அழைக்கவேண்டாம். நான் பிள்ளையுமல்ல, நாயுடுமல்ல, முதலியுமல்ல நான் ஓர் இந்தியன் என்னை இராமநாதன் என்று அழையுங்கள்" என்றுசொன்னதை கூற்றுநோக்கவேண்டும்.

பிராமணரல்லாதாருக்குள் ஒருவர் வீட்டில் ஒருவர் சாதாரணமாக சாப்பிடவேண்டும். அவன் ஜாதி என் ஜாதியைவிட கீழ்ஜாதி; ஆதலால் என் ஜாதியினர்களாவது (பாழும்) பிராமணஜாதியினராவது இங்கு இளப்பு வைத்திருக்கால் அங்கு சாப்பிட்டுக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்ளும் அறியாமையைப் போக்கவேண்டும். அதிசீக்கிரமாகப் பஞ்சமர்களுக்கு (பிராமணரல்லாதார் என்பதே ஒரு பெரும் ஜாதியாயிருக்கும் பொழுது பஞ்சமர்கள் என்று சொல்வானேன்? பஞ்சமர்கள் என்று அறியாமையால் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் சமது பிராமணரல்லாதாருக்கு) ஆலயப்பிரவேச உரிமையை அளிக்கவேண்டும். தென் ஜில்லாக்களில் இந்த ஆலயப் பிரவேசத்துக்கு பிராமணர்களைவிட பிராமணரல்லாதாரே தடையாக இருந்து வருகின்றனர். நாடார், வாணியர் முதலிய சில சமூகத்தவருங்கூட பிராமணரல்லாத மற்ற சமூகத்தவர்செல்லும் மண்டபம்வரைபோகவிடப்படாத நிலைமையிலிருக்க பஞ்சமர்களைப்பற்றிச் சொல்லாமலே தெரிந்துகொள்ள வேண்டியதிருக்கிறது.

நாயுடு, முதலியார் என்பவர்கள்மட்டும் சேர்ந்துவிட்டதால் பிராமணரல்லாதார் என்ற பொதுப்பெயர் உண்டாகிவிடாது. பிராமணரல்லாதார் என்றால் பிராமணரைத்தவிர்த்திருக்கும் மற்ற சகல சமூகத்தினரையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். பிராமணரல்லாதார் முன்னேற்றமடைய வேண்டிய தற்கு முயற்சிசெய்யும். தலைவர்கள் இதற்காகவேண்டிய பிரயாசையெடுத்துக்கொள்ளவேண்டும். ஜாதியென்றும் குலம் என்றும் கொள்கைகொண்டு எழுதப்பட்டிருக்கும் நூல்களை குப்பைத்தொட்டியில் கொட்டவேண்டும். பிறஜாதியினரை குறைகூறி நூல் எழுதும் போலிகளிடத்திலும் வாதஞ்செய்யும் வழக்கர்களிடத்திலும் பிராமணரல்லாதார் எல்லாரும் ஒரே ஜாதிதான் என்ற உணர்ச்சியை உண்டாக்கவேண்டும். நம்மை ஜாதி ஜாதியாகப் பிரித்து நமக்குள் வேற்றுமை நிலவியிருக்கும்படியான விஷயங்களைக் கொண்டு எழுதிவைக்கப்பட்டிருக்கும் நூல்களை நெருப்பிலிட்டுக் கொளுத்த வேண்டும். பிராமணரல்லாதார் மகாஜனக்கழகம் ஒன்றைநிறுவி சமூக விஷயமாய் எவரேனும் நூல் எழுதுவதாயிருந்தால் அக்கழகத்தாரிடம் அங்கீகாரம் பெற்றே எழுதவேண்டும் என்று நிபந்தனையேற்படுத்தவேண்டும். நாம் எல்லோரும் ஒரேஜாதியினர் என்று காட்டும்படியான நூல்களையெழுதி வெளியிடவேண்டும். அவ்விதம் வெளிவரும் நூற்களையே நாம் நமக்கு வேதமாக ஒப்புக்கொள்ளவேண்டும். நமக்குள் எந்தவிதமான கக்ஷி பேதங்களும் இருக்கப்படாது. நன்மை தின்மைகளில் தினையளவு வித்யாசங்கூட இல்லாமல் கலந்து கொள்ளல்வேண்டும். கல்யாண விஷயத்தைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும். தற்சமயமிருப்பதுபோல் அந்தந்த இனத்தவர்களுக்குள்ளேயே விவாகம் செய்வது என்ற கட்டாய வழக்கத்தைவிட்டொழிக்கவேண்டும். தத்தமது தொழில் கல்வி செல்வம் முதலியவைகளுக்குத் தகுந்தமாதிரியாக பிராமணரல்லாதாருக்குள் எந்த சமூகத்திலேயும் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும். அவ்வளவுதூரம் அந்யோன்யம் ஏற்பட்டால் நமது இயக்கம் தெய்வீகமானதாகஇருக்கும். கல்யாணக்கிரிகைகளை நடத்தவோ மற்றும் உபதேசங்கள் பெறவோ கோவில்களில் பூஜை செய்யவோ நாம் தகுந்த குருமார்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்; அக்குருமார்கள் சீடர்களாகிய நமது இல்லத்தில் அமுது அருந்து பவர்களாகவும் நம்மைச்சமமாக நடத்துபவர்களாகவும் மொத்தத்தில் கல்வியில் உண்மையான கல்வியைக் கரைகண்டவர்களாகவும் இருக்க வேண்டும். வீணாக ஜாதிபேதங்கற்பித்துக் கொண்டிருக்கும் அநியாய வைதீகப் பார்ப்பனர்களை விலக்கவேண்டும். தற்சமயம் அவசியமாக நாம்கவனிக்கவேண்டியது, நான் முதலாவது சொன்ன ஆலயப் பிரவேச உரிமையேயாம். நமக்குள் ஒரு சமூகத்தினர் ஆலயத்தில் சென்று சுவாமியைத் தரிசனம்செய்யும் உரிமையினின்றும் தடுக்கப்பட்டிருப்பாராயின் அவர்களுக்கு நமக்குள்ள அந்த உரிமையைக் கொடுப்பதற்காக அந்தணர்களுடன் நாம் போராடவேண்டும். அந்தணர்கள் மறுப்பாராயின் சாம பேத தான தண்டம் என்னும் சதுர்வித உபாயங்களையும் உபயோகிப்பதும் சாஸ்திர சம்மதமே. அதுவும் முடியாதென்றால் நாமும் விலகிநிற்கவேண்டும். தம்பிக்கு இல்லாத ஒரு சுதந்திரம் தமையனுக்கு மட்டும் ஏன்? அதைத்தமையனே உணரவேண்டும். பார்ப்பனர்கள் இவ்விதமல்லவா தமையனும் தம்பியுமாகிய நம்மைப் பிரித்தாழ்கின்றனர். அந்தணர்கள் நம்வழிக்கு வருகிறவரை அவர்களுடன் ஒத்துழைக்கவேகூடாது. நமக்குத்தான், நமக்குள்ளே சர்வ உரிமைகளுமிருக்கின்றனவே; பிராமணரல்லாதாருக்குள் மற்றவர்கள் எப்படிப்பட்டால் நமக்கென்ன என்று எண்ணிவிடக்கூடாது. ஆதிதிராவிடர்களுக்கு கோவிலில் உரிமை கிடையாது என்பதுதான் உறுதியாயின் நாமும் ஆதிதிராவிடர்களுடனேயே சேர்ந்துகொண்டு ஒன்று, சத்யாக்கிரஹம் செய்யவேண்டும்; அல்லது அப்படிப்பட்ட கோவில்களைப் பஹிஷ்கரித்து அவ்வழிசெல்லாமல் கட்டோடு நின்று கொள்ளவேண்டும். மூலவிக்கிரஹத்தை பிராமணர்கள் தான் தொடலாம் என்ற மூடபக்தியை இந்நாட்டைவிட்டு ஓட்டவேண்டும். இவைகளையெல்லாம் செய்வதற்கு முன்னால் நமது சொந்தத்தில் நம்மால் கட்டப்பட்டிருக்கும் கோவில்களில் பிராமணரல்லாதார் எல்லோரும் போய்வருகின்றனரா என்று கவனிக்கவேண்டும். அவ்விதம் கவனிப்பின் ஆதிதிராவிடர்கள் உட்பிரவேசிக்கக்கூடாது என்று சட்டதிட்டங்கள் உள்ள கோவில்கள் சில நம் கண்களுக்குப்புலப்படும். அதனை சீர்திருத்தம் செய்து கொண்டே அந்தணர்களிடம் நமது இயக்கத்தைத்தெரிவிக்கவேண்டும். இவ்விதம் செய்தால் தான் நாம் முன்னேறமுடியும். நம்முடைய இயக்கமும் பரிசுத்தமாயிருக்கும்; நமக்கும் வெற்றிகிடைக்கும்.

மேலுக்கு பிராமணரல்லாதார் என்று சொல்லிக்கொண்டு உள்ளுக்கு பல ஜாதிப்பிளவுகளும் பிளவு, ஜாதியிலும் களவு ஜாதி, உழவு ஜாதியென்று பெயரிட்டுக்கொண்டு இருப்போமாயின் இடிவிழும் இந்தியரின் இழவு ஜாதி ஒருநாளும் முன்னேறப் போவதில்லை.

அ. ப. ஆதித்தர்.

(தொடரும்.)

## தூரதிருஷ்டி.

லண்டனிலிருந்து பிரிட்டிஷ் ஆகாயப் படை மந்திரி ஸர். சாமியுல்ஹோர் ஆகாயக் கப்பல் மார்க்கமாய் இந்தியாவுக்கு வந்து சேர்ந்துவிட்டார். ஆகாய மார்க்கமாகவே இந்தியாவிற் பல விடங்களைப் பார்வையிடுவார்.

யார்க்கோமகன் (வேல்ஸ் இளவரசர் தம்பி) ஆஸ்டிரேலியா புதிய பார்லிமெண்டைத் திறந்து வைப்பதற்காக தம்பதிகளுடன் லண்டனை விட்டுப் புறப்பட்டுவிட்டார். பிரயாணக் காட்சி வெகு குதூகலமாயிருந்திருக்கிறது. நாசகாரிக்கப்பல்களும், ஆகாயக் கப்பல்களும் பாராவுக்குச் செல்லுகின்றன. இவர்கள் ஆறு மாதம் வரையும் 30000 மைல்கள் பிரயாணம் செய்வார்களென்று தெரிகிறது.

ஆல்ப்ஸ் மலை மீது சறுக்கி விளையாடச் சென்ற 10 பேர்களில் 8 பேர்கள் பனி மலை உருகி விழுந்து கொல்லப்பட்டார்கள்.

ஸ்காட்லாந்து மலை யேறுவதிலும், பனி விபத்தால் 5 பேர்களுக்குச் சேதமாம்.

என்னிஸா மாகாணத்தில் காகஸ் ஜில்லாவில் தங்கச் சுரங்க ஊழியர்கள் வீடுகளில் ஒரு பெரிய பனி மலை உருண்டு விழுந்து 22 பேர்கள் கொல்லப்பட்டார்கள்.

கடற் படைப் போட்டியில் இங்கிலாந்தை அமெரிக்கா முந்தப்பார்க்கிறது. 3145 லக்ஷம் டாலர் இவ்வருடம் அதிகம செலவு செய்ய அமெரிக்கா தீர்மானம் செய்திருக்கிறது.

அமெரிக்கா 14539000 அவுன்ஸ் வெள்ளி வாங்குவதாகச் சனப்பிரதிநிதி சபை தீர்மானித்திருக்கிறது. மார்க்கட்டில் அவுன்ஸ் வெள்ளி 55 சதத்திற்குக் குறைவாக விற்கிறதாம்.

லண்டனுக்கும், நியூயார்க்குக்கும் கம்பியில்லாமல் டெலிபோன் ஏற்பட்டு ஒரு நிமிஷம் பேசுவதற்கு 5 பவுன் கட்டணம் ஏற்பட்டு உபயோகமாகி வருகிறது.

இங்கிலாந்துக்கும், ஜெர்மனிக்கும் டெலிபோன் கம்பி போட்டு முடிந்துவிட்டது. ஜெர்மனியில் எல்லாப் பாகங்களுக்கும் பேசலாமாம்.

ஜெர்மனி எல்லைப்புறத்தில் வசிக்கும் பொன்னர் பெவீன்பெர்க் என்பவருக்கு 76 குழந்தைகள் உயிருடனிருக்கின்றன. அதில்முதல் மனைவிக்கு 69 குழந்தைகள். அம்மாது 56 வது வயதில் இறந்துபோனாள். அவள் 4 முறை 16 குழந்தைகளும், 7 முறை 21 குழந்தைகளும், 16 முறை 32 குழந்தைகளும் பெற்றனள். இரண்டாவது மனைவிக்கு 5 முறை 10குழந்தைகள் பிறந்ததில் 3 இறந்துவிட்டனவாம். இவரொரு குட்டிப் பிரம்மாவென்றே கூறலாம.

மலேயாவில்ஒருஆற்றில்40 அடிஜலம் பெருக்குற்று மிகுந்த சேதமுண்டாயிருக்கிறது. சுனிச்தொழில் வேளையர்கள் மரத்திலேறிக் கொண்டார்கள். அநேகர் வீடின்றித் தவிக்கிறார்கள். சுல்தான், நகரில் திறமையான உதவி செய்து வருகிறாராம்.

மெக்ஸிகோவில் கலகம்வலுத்து வருகிறது. சுமட்ராவில் கலகம் தோன்றி கலகத்தலைவன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

டிரான்ஸ் காகோஷியாவில் பலமான பனியும், புயலுமேற்பட்டு 100 கோபுரங்கள் இடிந்து விழுந்தன. 6 தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள்.

சைனாவின் சுதந்திரதாக அதிகரிப்பால் அந்நியர்களுக்கு மிகுந்த அபாய மேற்பட்டிருக்கிறது. அமெரிக்கரும், பிரிட்டிஷாரும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் கடற்படைகளிருந்தும் பிரயோஜனமில்லை. கைனுக் நாகம் அவ்வளவு மேலனாயிருக்கிறது.

## பிராமணரல்லாத சமூகமுன்னேற்றம்

### சிறந்த வேலைத்திட்டம்.

குடியரசுகூறும் சாராம்சம்.

ஆங்காங்கு ஜில்லா தாலுக்காகிராம வாரியாக கிளைச்சபைகளை ஏற்பாடு செய்வதும் பிரசாரம் செய்வதும் தீர்மானதிட்டங்களை நிறைவேற்றுவதும் பொது மக்களுடைய வேலையாய்விட்டது. சீக்கிரத்தில் வேலை செய்வோரின் கூட்டம் என்பதாக ஒரு கூட்டம் கூட்டி ஜனவரி மாதத்திற்குள்ளாகவே இத்திட்டங்களை நிறைவேற்றத்தகுந்த வழிகளைக் காணவேண்டும்.

இக்கூட்டத்தின் அங்கத்தினர்கள் கூடிய வரையில் எந்தத்தேர்தலுக்கும் நிற்கக் கூடாதவர்களாகவும் தங்களது முழு நேரத்தையும் இதற்கே செலவிடுபவர்களாகவும் இருக்கவேண்டும். 12-பேருக்குக் குறையாமல் மாதம் 30 ரூபாய்க்கு அதிகப்படாத சம்பளமும் 10 ரூபாய்க்கு குறைவுபடாதபடியும் கொடுத்து ஜில்லா சுற்றுப்பிரயாண அமைப்புக்காரரையும், மாதம் 50-ரூபாய்க்கு அதிகமில்லாத சம்பளமும் 25-ரூபாய்க்கு குறையாமல் படியும் கொடுத்து 3 மண்டலாபதிகளை தனிக்கையாளராகவும் நியமித்து வேலை துவக்கவேண்டும். ஆக இந்தச் செலவுகளுக்கும் சில்லரைச் செலவுகளுக்குமாக மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் குறைந்தது மூன்றுமாதத்திற்காவது தமிழ்நாட்டிற்கு 3000 ரூபாய் வேண்டும். இந்தப்பணத்தையாராவது சிலரோ ஒருவரோ தருவதாக இந்த இரண்டுவாரத்திற்குள் ஸ்ரீமான் மதுரை பி. டி. ராஜன் அவர்களுக்கு தங்களது பெயர்களையும் தொகைகளையும் அனுப்பிவிடவேண்டும். அப்படிக்குஇயலாதவரை ஸ்ரீமான்கள் பி. டி. ராஜன் 1000 ரூபாயும் சௌந்திர பாண்டிய நாடார் 1000 ரூபாயும் ஈ. வே. இராமசாமி நாயக்கர் 500 ரூபாயும் ஸி. எஸ். ரத்தின சபாபதி முதலியார் 500 ரூபாயுமாகப்போட்டுக் கொண்டு ஜனவரி 15உயில் கூட்டம் கோவையிலோ மதுரையிலோ போட்டு காரியங்கள் துவக்கவேண்டும். அப்படிக்குஇல்லாதவரை நமது மகாநாடு என்பது நமது எதிரிகள் சொல்லுவதுபோல் தான் என்று பிறர் நினைக்க இடமுண்டாகிவிடும். மகாத்மா காந்தியவர்கள் ஏப்ரல் மத்தியில் நமது நாட்டிற்கு விஜயம் செய்யப்போகிறார். அக்காலத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் மக்களின் சுயமரியாதைக்கும் பொருளாதார நிலைக்கும் வேலைசெய்ததா அல்லது காங்கிரஸ் வேலைசெய்ததா? என்பதை அறியச்செய்து கதரைப் பரப்ப நாம் எவ்வளவு தூரம் பிரசாரம் செய்திருக்கிறோம் என்பதைக்காட்டி நமது இயக்கத்திற்கு மகாத்மாவின் ஆசியைப்பெறவேண்டும். மகாத்மாவின் அபிப்பிராயங்கள் வர வர தாக்ஷண்ணியத்திற்கு கட்டுப்படக்கூடியதாயிருந்தாலும் அதுவும் பெரியோர் குணத்திலொன்றாதலால், மகாத்மாவின் ஆசி நமக்கு இருப்பதென்பது நமது சுயமரியாதை இயக்கத்திற்கு எவ்வளவோ மேன்மையை உண்டாக்கும். ஆதலால் மகாநாட்டுக்கு வந்து போனவர்களும் மகாநாட்டு அநுதாபிகளும் இதை கவனித்து உடனே தாங்கள் செய்யவேண்டியதைச் செய்வதுடன் முதல் காரியமாக கதர் உடுத்தவேண்டும் என்றும் தங்கள் தங்கள் சிப்பந்திகளிடையிலும் கதரைப் பரப்பவேண்டும். அதில்லாமல் வாயில் பேசுவதானது பார்ப்பன அரசியல் புரட்டுக்கு இளைத்ததாகாதென்று கண்டிப்பாய் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குறிப்பு:-இம்மாதம் 1-தேதி முதல் கதரின் விலையும் கஜம் ஒன்றுக்கு 9 பைசா வீதம் குறைவு பட்டிருக்கிறது.

---

அமெரிக்காவில் ஐரோப்பியர் அதிகமாய்க் குடியேறுவதைத் தடை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அடுத்த ஜூலை மாதத்திற்குப் பின் ஒவ்வொரு வருஷமும் அனுமதிக்கப்படும் தொகையில 11126 ஜனங்கள் குறைக்கப்படுமென்று தெரிகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார் குலமித்திரன்
அக்ஷய ஞு தை மீ ௰௨ உ

## சமூக முயற்சி.

நம் பாரத நாட்டில் ஒத்துழையாமை தர்மத்தை மகாத்மா காந்தியடிகள் ஜனங்களுக்கு உபதேசம் செய்த ஆரம்பத்தில் தான் பிராமணரல்லாத சமூகக் கிளர்ச்சியும் ஆரம்பமாயிற்று. அப்போது ஒவ்வொரு ஜன சமூகத்தின் முயற்சியும், தத்தம் முன்னேற்றத்தில் வெகு சிரத்தை காட்டிக் கொண்டிருந்தது. மகாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாமையில் சில ஜனங்கள் பூரணப் பற்றுக் கொள்ளாவிடினும் நாட்டிலுள்ள சமூக முயற்சிகளானது சர்வ ஜனங்களும் ஒத்துழையாமை காட்டுவதுபோல்த் தோன்றி வந்தன. சர்வ பிராணிகளுக்கும் விசேஷ சுறுசுறுப்புண்டாயின வென்று கூட விளம்பலாம்.

மகாத்மா சிறைச் சாலைக்குட் புகுந்தார். ஒத்துழையாமைக்கு உயிர் நாடி சற்றே தளர்ந்தது. சுயராஜ்யக் கட்சியின் ஒத்துழைப்புப் புகுந்தது. பிராமணரல்லாத சமூக முயற்சி உத்தியோகமேற் பதவிமேற்தானமாயிருந்தது. தேர்தல் திருவிழாக்கள் எங்கும் மலிந்தன. ஆடம்பரம் மிகுந்தது. சமூக முயற்சிகள் தானே சாய்ந்து விழுந்தன. இவ்வதிர்ச்சியோ ஒவ்வொரு சமூகத்தையும் போய்த் தாக்காதொழியவில்லை.

நாடார் சமூக முயற்சியைக் கண்ட ஒரு ஜில்லாக் கலெக்டர், நாடார்கள் ஜெர்மானியர்களைப் போல் முன்னேறுஞ் சாதியென்று சிறப்பித்தாரென்றால் நாடார் சமூகம் எத்தீவிர முயற்சியோடிருந்திருக்க வேண்டும். உலகத்தையே பற்றிய வியாதி இவ்வொரு சமூகத்தை மட்டும் பற்றாது விடுமா? விடாது. இரண்டு வருஷங்களாக நாடார் சமூகத்தில் முக்கியமான தலைவர்களுக்குள்ளே தேர்தல் மூலமுண்டான பெரும்பிளவு இன்னும் ஒன்றுகூடவில்லை. இதனாற் செலவான பொருளால் வெள்ளிக் கோபுரமும், தங்கக் கலாசாலையும் அமைக்கலாம். போனாலும் போகட்டும்; வேறு பாடொழிந்ததா? இல்லை. இம்மட்டும் விட்டதா? சமூகத்தையே நித்திரையிலாழ்த்தி விட்டது! சமூக முயற்சிகளொன்றேனும் சரிவர நடக்கவில்லை. பாரத நாடாகிய சந்திரன் ஆடம்பரமென்னும் அரவத்தால் விழுங்கப் பெற்று தரித்திரமென்னும் இருள் சூழ்ந்திருப்பதை ஒழி தந்துயிர்ப்பிக்க வருவதுபோல் மகாத்மா காந்தியடிகள் ஒரு வருஷமாய் தேச நன்மையை நாடித் தவமிருந்து வெளியேறி வரும் சமயமாயிருப்பதால் சஞ்சீவி கொண்டு சிரஞ்சீவி பெற்ற உயிர்கள்போல் ஒவ்வொரு சமூகச் சாயலும் தலை தூக்கி நிற்க வேண்டும்.

நாடார் கான்பரன்ஸ் கூடாததினாலே நாடார் சமூக முயற்சிகள் தளர்வடைவதை யறிந்த சமூகத் தலைவர்கள் சென்ற கௌன்ஸிலில் தீர்மானித்தபடி நாளது மாதத்தில் நாடார் மகாஜன சங்கம் ஜெனரல் மீட்டிங்கூட்டி கான்பரன்ஸ் நடத்த வேண்டிய திட்டங்களையும் தயார் செய்வதில் தடங்கமாட்டார்களென்று நம்புகிறோம். ஏழை மாணவர்கள் பலர் ஸ்காலர்ஷிப்புக்குக் காத்திருக்கிறார்களென்று தெரியவருகிறது. அதைச் சரியாகக் கவனிக்க வேண்டும் ஸ்காலர்ஷிப் பெறுவதில் சில பணக்காரப் பிள்ளைகளும் பலித்தவரையும் பார்ப்போமென்று மனுக்கள் கொடுப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆகையால் சரியான நிபுணர்களடங்கிய ஒரு கமிட்டி நியமித்து மனுதார்களை நன்றாய்ச் சோதித்து ஸ்காலர்ஷிப்புக்கு அனுமதி கொடுக்க வேண்டும். பணக்கார மாணவர்களும் ஏழைகளாகப் பிரியப்பட வேண்டாமென்றெச்சரிக்கிறோம். மேலும், சங்கத்தில்பணம் சேர்ந்துவிட்டது; எல்லோருக்கும் உதவிகிடைக்குமென்று மாணவர்களெல்லாம் மனுக் கொடுத்துவிட்டு பிறகு இல்லை என்றேமாந்துபோகாமல் சங்கத்தின் பண வட்டி வருவாயிவ்வளவு; அதற்கு வருஷம் இத்தனை மாணவர்களுக்குத்தான் உதவி கிடைக்குமென்பதைக் காலதாமதமின்றி அறிவித்து விடவும் வேண்டும். மாணவர் சகாய நிதியில் சங்க நிர்வாகச் செலவுக்கு ஈடுபடுத்தி விடாமல் சரியான பாதுகாப்பும் ஏற்பட வேண்டும். சங்கம் நிர்வாகமும் சரியாய் நடைபெற வேண்டுமானால், மீண்டும் நல்ல பிரசாரகர்களை வைத்து சமூக முன்னேற்றப் பிரசாரம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்க வேண்டும். இவைகளை யெல்லாம் சமூக தூதனாகவிருந்து பிரசாரம் செய்து வந்ததும், செய்து வருவதும், செய்து வரக்கூடியதும் நமது சமூகப் பத்திரிகைகள் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமா? நாடார் சமூகத்தை அடிக்கடி தட்டி யெழுப்பிக் கொண்டிருக்கும் நாடார் சமூகப் பத்திரிகைகளை நசித்துப்போனால் நாடார் சமூக முயற்சி என்னாகுமென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. தற்போதுள்ள சமூக அயர்வு சமூகப் பத்திரிகைகளுக்கும் சற்றே தோன்றியிருப்பதால் அவைகளின் க்ஷேமாபிவிருத்தியையும் நாடார் சமூகமும், சங்கமும், தலைவர்களும் நன்கு கவனித்துக் கொள்ள வேண்டுகிறோம். நாடார் மகாஜன சங்கம் காரியதரிசிகள் இம்மாதமுடிவுக்குள் ஜெனரல் மீட்டிங் கூட்டுவதற்கு வேண்டிய வேலைகள் நடத்துவார்களென்று நம்புகிறோம்.

## கோயில்ப் பிரவேசம்.

சமீபத்தில் மதுரையிற் கூடிய பார்ப்பனரல்லாதார் மகாநாட்டின் வரவேற்புக் கழகத்தலைவர் ஸ்ரீமான் சுப்பிரமணிய முதலியாரவர்கள் கோயில்ப்பிரவேசத்தைப் பற்றிக் கூறும்போது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி யாகிய மூன்று ஜில்லாக்களின் சில பாகங்களில் நாடார்களுக்கு கோயிற் பிரவேசத் தடையிருப்பதை மட்டுங் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் மகாநாட்டின் தீர்மானத்திலோ கோயில்ப் பிரவேசம் சகலருக்குமிருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால்கோயிற் பிரவேசத்தடை பல ஜாதியார்களுக்குமிருக்கிறதென்பதும், ஒரு சிலஜாதியார்களே தங்களுக் குரிமையாக வைத்துக் கொண்டிருக்கிறார்களென்பதும் நன்கு விளங்குகிறது.

கோயில்ப் பிரவேசத் தடையானது இந்தியாவில் பல விடங்களில் பள்ளர் பறையர் சக்கிலியர் நாவிதர் வண்ணார் முதலிய சில வகுப்பாருக்கு வெகுநாட்த் தடையாயிருந்து வருகிறது. மறவர், நாடார், வாணியர், பள்ளி, கம்மாளர் மற்றும் சில வகுப்பினருக்கு ஒரு சில விடங்களில் இடைக்காலத்திலேற்பட்ட தடையாயிருந்துவருகிறது. ஆகையால் சகலருக்கும் பிரவேச உரிமையுண்டென்று பொதுவாகத் தீர்மானத்திற்குறிப்பிடப்பட்டிருப்பது மகாஜனங்களின் பெருந்தன்மையைப் பெரிதும் விளக்கிக்காட்டுகிறது. ஆனால் இதுபோன்ற பல மகாசபைகளில் இத்தீர்மானங்கள் பல தடவைகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. இவையையும் ஒன்றேனும் ஓரிடத்திலேனும் அனுஷ்டானத்திற்கு வரவில்லை. அனுஷ்டானத்திற்கு வராததினால் தடைப்பட்டவர்கள் குடி முழுகிப் போகவில்லை; போகப் போவதுமில்லை; என்றாலும் அதனால் சுயராஜ்யமென்பது பயாஸ்கோப்படம்போல் காட்டி மறைந்து உயிரற்ற உருவம்போல்க் காணப் படுகிறது. ஆகையால் இம்மகாநாட்டு இத்தீர்மானமும் பேச்சளவில் காகிதத்திலிருந்து விடுமாகிற் பிரயோசன மொன்றுமில்லை. பிராமணர்களால் பிராமணரல்லாதாருக்கெல்லாம் சுயமரியாதைக் குறைவிருக்கிறதென்ற உணர்வுடையவர்கள் பிராமணரல்லாதவர்களிலேயும் கால்ப்பிராமணன் அரைப்பிராமணனாக அநுகம்பாவித்து பிராமணரல்லாத சிலரை சுயமரியாதைக் குறைவாக நடத்தும் கொடுமைகளை அறவேயொழிக்கவேண்டும். முயற்சி விரைவில் நடைபெற வேண்டும். இம்மகாநாட்டில் பந்திபோஜனம் ஒன்று நடந்ததுபோல் எல்லாத் துறைகளையும் ஒன்றாகத் திறந்துவிட வேண்டும். பிராமணரல்லாத சமூகப்பலத்தை அலட்சியமாய்க் கருதும்படி இதுவரையும் விட்டு வந்திருப்பது போல் இனிமேலும் விட்டுக் கொண்டிருந்தால் எந்தக் காலத்திலும் பிராமணீயத்திற்கும் பிரிட்டிஷ் ஆட்சிக்கும் அடிமையாகவே யிருந்துவர வேண்டிய நிலைமை யேற்பட்டுவிடும். பிராமணரல்லாதார் பலத்தை பிராமணர்கள் மதிப்பதுடன் பிரிட்டிஷ் அரசாங்கமும் மதிக்கும்படி பிராமணரல்லாத பெருந்தலைவர்கள் பெரும் முயற்சியெடுக்க வேண்டும். பெரும் பலமுண்டாகி பெரிதும் மதிக்கப்பட வேண்டுமானால் பிராமணரல்லாதாருக்குள்ளே யிருந்துவரும் சிறுதுவேஷங்கள் ஒழிந்து ஒன்றுபட வேண்டும். ஒன்றுபட்டாலுண்டு வாழ்வன்றி யென்றும் தாழ்வென்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துணர வேண்டும்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியரின் உரிமையை ஸ்தாபிக்க முயலும் போது இந்தியாவில் இந்தியர்களையே இந்தியர்கள் சரியாய் நடத்துகிறார்களா வென்ற கேள்வி பிறப்பது போல், பிராமணர்களும் பிராமணரல்லாதாருக்குள்ளே கீழ் மேலென்ற பேதங்களில்லையா; தங்களைச்சேர்ந்தாரனைவரையும் சரியாய் நடத்துகிறார்களா? வென்று ஒரு கேள்வி கேட்கிறார்கள். அந்தப்பாடத்தை பிராமணரல்லாதாரும் சிலர் படித்து விட்டு பிராமணீயத்திற்கு ஆதரவு கொடுத்து வருகிறார்கள். அனேக பேதங்களுள்ள இந்தியாவுக்கு இந்த சமயம் சுயராஜ்யம் பலன் தருமா வென்று ஒரு ஆங்கிலேயன் கேட்கும்போது ஆப்பிரிக்கா, கானடா, பிரான்ஸ் முதலிய வெள்ளையர் நாட்டில் பல பேதங்களிருக்கும்போது சுயாட்சி வழங்கவில்லையா? அதுபோல் எங்களுக்கும் சுயாட்சி வந்தால் சர்வ பேதங்களும் ஒழிந்து போகுமென்று பதிலிறுத்தவது போல் பிராமணீயம் ஒழிந்தால் பிராமணரல்லாத பேதங்களும் உடனே ஒழிந்துவிடுமென்று ஓரே பதிலிற் சொல்லி விடலாம். ஆயினும் சொல்லாமலே பெரியோர் என்ற முறையில் பிராமணரல்லாத பிரமுகர்கள் பேதங்களை யொழிக்கப் பெரும் பிரயாசை யெடுக்க வேண்டும். தென்னாட்டில் அதற்குச் சரியான வழி பலருக்குக் கோயில்ப் பிரவேசத் தடைநீக்க மென்பதை அவர்கள் அறிவார்களாக முடிவாக ஒன்று கூறுகிறோம். ஜனங்களை ஏமாற்றுவதற்காக இத்தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறதென்று ஒரு சார்பார் கூறுகிறார்கள் ஏமாற்றுங் காலமும் ஏமாறுங்காலமும் இதுவல்ல. ஏமாற்றுகிறவர்கள் ஏமாறிப்போவார்கள். ஏமாறுகிறவர்கள் ஒரு சமயம் எல்லா வல்லமையும் அடையக்கூடும். ஆகையால் இது விஷயத்தில் மகாநாட்டிற்கு விஜயஞ் செய்திருந்த பெருந்தலைவர்களும், குடியரசு, திராவிடன், ஜஸ்டிஸ் முதலிய பிராமணரல்லாத பத்திராதிபர்களும் எப்படி நடக்கிறார்கள்; நடத்துவார்கள் என்பதை எதிர் பார்த்திருக்கும் ஜனங்களுக்கு எவ்வித விமோசன மேற்படுகிறதென்பதைப் பிறகு அறிவோம்.

## குறிப்புகள்.

முன்னேற்றம்.

ஒரு நாடோ சமூகமோ முன்னேறுவதற்கு ஆடவருடன் ஸ்திரீகளும் சர்வகாரியங்களிலும் விருத்தியடைய வேண்டுமென்பதை இந்தியா எப்போதும் மறந்துபோகவில்லை. சகவாச தோஷத்தால் ஒரு படி இறங்கி நின்றாலும் மீண்டும் தலை தூக்க ஆரம்பித்திருக்கிறது.

சென்னை சட்டசபையில் ஸ்ரீமதி முத்துலட்சுமியம்மாள் நியமனம் பெற்றிருக்கிறார்கள். இவ்வம்மையார் பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டுவருகிறார்கள்.

பம்பாய்ச் சட்டசபையில் இரண்டு ஸ்திரீகள் ஸ்தானம் பெறுவதற்கு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

பூனாவில் கூடிய அகில இந்திய ஸ்திரீகள் மகாநாட்டில் தலைமை வகித்த பரோடா மகாராணியார் ஸ்திரீகள் முன்னேற்றத்திற்குச் சிறந்த யோசனைகள் சொல்லியிருக்கிறார். அம்மகாநாட்டில் முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஸ்திரீகளின் மகத்தான கடமைகளையும், பால்ய விவாகத்தின் கெடுதலையும், கோஷா முறையின் அனர்த்தங்களையும் பெண்கள் நன்குணர்ந்திருக்கிறார்களென்று நன்கு தெரியவருகிறது. கல்வித் துறையில் பெண்கள் பின்னடைந்திருக்கும் புள்ளி விபரங்களை வெளியிட்டிருக்கும் விபரம் பின் வருமாறு:—

ஆயிரத்துக்கு,

| | ஆண் | பெண் |
|---|---|---|
| இந்தியா | 139 | 21 |
| மைசூர் | 143 | 22 |
| பம்பாய் மாகாணம் | 157 | 27 |
| பரோடா | 240 | 47 |
| கொச்சி | 317 | 115 |
| திருவாங்கூர் | 38) | 173 |
| காஷ்மீர் | 46 | 3 |
| பீஹார் | 96 | 6 |
| மத்திய இந்தியா | 65 | 7 |
| ஹைதராபாத் | 57 | 8 |
| மத்திய மாகாணங்கள் | 87 | 9 |

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

காட்டிலுள்ள ஒவ்வொரு சமூகமும் இப்புள்ளி விபரங்களைக் கவனித்து பெண் கல்வி விஷயத்தில் பிரயாசை யெடுக்க வேண்டும்.

## ஒரு மந்திரிக்கு

## பிராமண மயக்கம்.

இந்தியக் கலைஞான சங்க உபத் தலைவர் ஸ்ரீமான் டி. எஸ். ராமசாமி ஐயருக்குப் பாராட்டுதல் கூட்டம் மைலாப்பூரில் நடந்தபோது அக்கிராசனம் வகித்த சென்னை மந்திரிகளிலொருவராகிய கனம் திவான்பகதூர் ஆரோக்கியசாமி முதலியார், ஸ்ரீமான் ஐயரின் பெருமுயற்சியைப் பற்றிப் பேசிவிட்டு, பிராமணரல்லாத வியக்கத்திற் புகுந்து டாக்டர் நாயரின் கல்மஷமற்ற கொள்கையைப் பிரஸ்தாபித்து விட்டு பின்னால் சமூகாபிவிருத்தியில் அக்கட்சி சரியான வேலை செய்யவில்லையென்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். அக்கட்சி சமூக சீர்திருத்தத்திற் கவலை கொள்ளாமல் ராஜீயக் கட்சியாக மாறிவிட்டதால் உண்மையான சீர்திருத்தம் கிடையாமற் போய்விட்டதாக குறிப்பிருக்கிறார்—வாஸ்தவந்தான். மகாத்மா காந்தியடிகளும் சுயராஜ்யக் கட்சிக்கும் சமூக சீர்திருத்தந்தான் அவசியமென்று யோசனை சொல்லுகிறார். அதைத் தான் அவர்கள் சரியானபடி கேட்டு நடக்க முடியாமல் பழய கட்டுத்துறைக்கே ஓடுகிறார்கள். ராஜீய சீர்திருத்தத்திலிருந்தே சமூக சீர்திருத்தமுண்டாக வேண்டுமென்று சுயராஜ்யக் கட்சியார் கருதுவதுபோல்த்தான் பிராமணரல்லாதாரும் வகுப்பையும், ராஜீயத்தையும் கருதியிருக்கலாம். ராஜீயப் பிடியை அடிப்படையாய் வைத்து தங்கள் வகுப்பை முன்னேற்றக் கருதுவது குற்றமா? அப்படியில்லாவிடின் ஸ்ரீமான் முதலியாருக்கு கனம் மந்திரி பதவி கிடைத்திருக்குமா?

"எந்த வகுப்பாயிருந்தாலும், ஒரு வகுப்பைத் தனியாக வெளியே தள்ளும் ஒரு கட்சி தேச க்ஷேமத்திற்கு வேலை செய்வதாக மாட்டாது" என்றார். இதை பிராமணர், பிராமணரல்லாதார் யாவரும் நன்கு கவனிக்கத்தக்கது.

"இந்தத் தேசத்தில் ராஜீய முன்னேற்றத்தில் நாம் எந்த வகுப்பையும் ஒதுக்கிவிடவோ, எதிர்த்துக் கொள்ளவோ முடியாது" என்றார். தீண்டாமை ஒழிந்தவரையும் சுயராஜ்யத்திற்குக் காத்திருக்க முடியாதென்று கூறுகிறவர்கள் கனம் மந்திரி எச்சரித்திருப்பதைக் கவனிக்கவேண்டும்.

"தேசிய அபிவிருத்திக்காக வேலை செய்கையில் மிகுந்த முன்னேற்றமடைந்த வகுப்பினராகிய பிராமணர்களை புத்திசாலிகளாகிய எவரும் அலக்ஷியம் செய்துவிட முடியாது. முன்னேற்றப் பாதையில் சாத்தியமான எவ்வழியிலும் அவ்வகுப்பினர் வேலை செய்திருக்கிறார்கள்" என்றார். இதை ஒருவாறு ஒப்புக்கொள்ளலாமென்றாலும் பிராமணர்கள் தங்கள் சுய நலத்திற்காகப் பொதுவென்று சொல்லும் கொள்கையை இனி ஒருவரும் ஒப்ப முடியாது.

"நமது தேசத்தின் சரித்திரத்தைப் பார்த்தால் எந்தப் பிரிவிலும் சிறந்தவர்களாக உள்ள சிலர் பிராமணர் வகுப்பிலிருந்தே தோன்றினார்கள் என்பதை அறிவோம்" என்றார். இதைத்தான் நாம் "பிராமண மயக்கம்" என்கிறோம். உலக சரித்திரத்தில் எந்தப் பிரிவிலும் சிறந்தவர்களாக முருகன், கிருஷ்ணன், ராமன், புத்தன், சமணர், ஏசு, முகம்மது, வள்ளுவர், விவேகானந்தர், தாகூர், மகாத்மா காந்தி, ஜனகன், கம்பன், காளிதாஸன் முதலியவர்கள் பெயர்களைப் பார்க்கிலும் வேறு யார் பெயராவது பெரிதும் புகழப்படுகிறதா? இவர்கள் எல்லாம் பிராமணர்களா? உலகத்தில் எந்தக் காலத்திலும் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் பண்ணி வருவோர் பிராமணர்களா? உயிர் வதைக்கிலக்கான யாகம் பாவமென்று பிராமணர்களைத் தடுத்தாட் கொண்டது புத்தர் அல்லவா? சாதி பேதங்களை வகுத்து தேசத்தைச் சீர்குலைய வைத்த ஆச்சாரியர்களையும், க்ஷத்திரியர்களைக் கருவறுப்பதாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த பரசுராமனையும் நமது கனம் மந்திரி குறிப்பிட்டார்போலும்.

## வேண்டுகோள்.

"நாடார் குல மித்திரன்" க்ஷேம நிதி தர்மப் பண்டு லாட்டரிப் புஸ்தகங்கள் நமது நாடார் நண்பர்கட்கும், சர்தார் மேயர்கட்கும், இதர சமூகத்தவர்கட்கும், எல்லா அபிமானிகட்கும் இதுவரையும் ஏராளமாய் அனுப்பி முடிந்திருக்கிறது. பிரைஸ் எடுக்கிற காலம் இன்னும் நான்கு மாதங்கள் தானிருக்கின்றன. வருகிற பங்குனி மாதம் முடியுமுன் எல்லாரும் எல்லாப் புஸ்தகங்களையும் பூர்த்தி செய்தனுப்புவதுடன் மேற்கொண்டும் வேண்டிய புஸ்தகங்களுக்கு எழுதும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

மேலும் நாடார் மகாஜன சங்கம் ஏழை மாணவர்கள் சகாய நிதி லாட்டரிக்கு அபிமானத்துடன் வேலை செய்து வெற்றி பெற முடிந்த கனவான்களும் மித்திரன் பாலன்புகூர்ந்து மிகுந்த ஒத்தாசை செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

நாடார் மகாஜன சங்கம் பிரசாரகர்களாயிருந்த நமது நண்பர்களெல்லாம் மித்திரன் லாட்டரிக்கு சிறிது காளாவது ஆனந்தமாக வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்கள் விருப்பத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

## சண்முகவேல் வாசகசாலை.

தூத்துக்குடி மா. வே. சண்முகவேல் நாடார் அவர்கள் ஞாபகச்சின்ன வாசகசாலையின் முதலாம் ஆண்டு அறிக்கைப் பத்திரம் கிடைக்கப்பெற்றோம். இதன் ஆரம்ப சொற்பகால வளவிற்குள் விசேஷ ஆதரிப்புடனும் அதி மேன்மையுடனும் உன்னதமாய் நடைபெற்றிருத்தலைக்காண அளவிலாமகிழ்வெய்துகிறோம். இதன் வளர்ச்சியின் பெருமைக்கு கிரவகிக்கும் அன்பர்களின் திறமை ஒரு காரணமாயிருப்பினும் இவ்வாசகசாலை மூலைத்தற்காதிகாரணராய் விளங்கிய உயர் நோக்கங்கொண்டு பொதுஜன சேவையில் வெகுவாய் ஈடுபட்டுழைத்த ஸ்ரீமான் மா. வே. சண்முகவேல்நாடார் அவர்கள் பாற்ஜனங்கட்குள்ள பற்றுதல் கொண்டு அவரினின்றும் பரிணமிக்கப் பெற்ற சக்தியுமொருகாரணமாகுமென்று குறிப்பிடுதல் ஈண்டு பொருத்தமுடைத்தாகும். இவ்வாசகசாலை 120 அங்கத்தினர்களுடன் இரண்டு தினசரி,மூன்றுவாரமொருமுறை,நான்கு மாதமொருமுறை, தமிழ் ஆங்கிலம் ஆகிய பத்திரிகைகளுக்கிடங் கொடுத்திருப்பதை நோக்க பத்திரிகையின் பயனை எத்தனை யுணர்ந்திருக்கின்றதென்பது தெற்றன விளங்கும்.

புஸ்தகங்கள் அவ்வளவு அதிகமில்லாவிடினும் வாசகசாலைக்கு வந்தும் வெளியிலெடுத்துச் சென்றும் படித்தவர்களின் தொகை 8434 என்பது வாசகசாலையின் மேல் ஜனங்கட்குள்ள ஆர்வத்தையும் படித்துப்பயன் பெறவேண்டுமென்று விருப்பத்தையும் காட்டுகிறது. இத்தகைய வாசகசாலைகளாலாய பயன் செப்பத்தாமன்றென்ற மட்டில்விடாது அவை எக்காலத்தும் வாடாதிலங்கி வாழ்த்தக்கதோர் பண்டு மிக்க அவசியமென்று வற்புறுத்திக் கூறுகின்றோம். ஆண்டுவிழா நடவடிக்கை காலதாமதத்திற்கிடைத்தமையான் அடுத்துவரும் இதழில் இடம் பெறும்.

## அறிக்கை.

அபிமானிகளே!

நமது மித்திரன் க்ஷேமாபி விருத்தி குறித்து ஆரம்பிக்கப்பெற்றிருக்கும் யோகச்சீட்டு விற்பனைக்கு 22 ரசீதுகள் கொண்ட புஸ்தகங்களாகவும் 11 ரசீதுகள் கொண்ட புஸ்தகங்களாகவும் அன்பர்களுக்கு அனுப்பியிருப்பதுடன் புஸ்தகமாதிரியில்லாமல் சிறிய அளவில் சேர்க்கையாக 22 ரசீதுகள் கொண்டு சாத்துகளைச் சுருக்கியும் அச்சிட்டு அனுப்பியிருத்தலால் அபிமானிகள் தயங்காது விற்று கவுண்டர் பாயிலேயும் பணத்தையும் எமக்கு அனுப்பி வைக்கவேண்டுகிறோம்.

பத்திராதிபர்.

## நாடார் மஹாஜனங்களுக்கு வேண்டுகோள்.

நான் வியாபாரத்திற்காக சமீபத்தில் இரங்கூன் பிரயாணம் வைத்திருப்பதால் நமது தாய்ச் சங்கமாகிய மதுரை நாடார் மஹாஜன சங்கத்தில் வகித்துவந்த ட்ராவெலிங் ஏஜெண்ட் பதவியைராஜினாமாச் செய்து விட்டேனென்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகிலும் எனது சாவகாசமான காலத்தில் தவறாது நமது சங்கத்துக்குச் செய்ய வேண்டிய என் கடமையை செய்ய தயாராகவிருக்கிறேன்.

எஸ். ஆர். மூக்கநாடார்,
சிவகாசி.

## பரிசளிப்பு.

சாங்குநேரி தாலுகா சமுகரெங்கபுரம் போர்டு பெண் பாடசாலையின் பரிசளிப்பு விழா தாலுகா போர்டு மெம்பர் ஸ்ரீமான் ஆர் வி. பெரியசாமி பிள்ளையவர்கள் அக்கிராசனத்தில் நடைபெற்றது. ஊரிலுள்ள முக்கியஸ்தர்கள் எல்லாரும் விஜயம் செய்திருந்தார்கள். பிள்ளைகள் சில முக்கியமான பாடங்களில் பரீக்ஷிக்கப்பெற்று அவரவர்களுடைய தேர்ச்சிக்குத்தக்கதாக நல்லவிதமான சாமான்கள் பரிசளிக்கப்பெற்றனர். பின்னர் பிள்ளைகள் கோலாட்டம், கும்மி முதலியவை நடத்தினர். சில பிள்ளைகள் ஹார்மோனியம் வாசிப்பதைக் கேட்டு எல்லோரும் ஆனந்தமடைந்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் "பெண் கல்வியும், அதன் அவசியமும்" என்பதைப் பற்றி ருசிகரமாய்ப் பேசியானதும் சந்தனம், தாம்பூலம் பரிமாறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது என்று ஸ்ரீமான் எஸ். ஜேசுதாஸன் அவர்கள் எழுதுகிறார்.

## விருதுநகர்,

## நாடார் பரிபாலன சங்கம்.

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று 15—1—27-ல் ஸ்ரீமான் எஸ். உத்தண்டபாண்டிய நாடார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடி பட்டிவீரன்பட்டி மிராசுதாரும், நாடார் மகாஜன சங்க உபத் தலைவரும், தமிழ் சர்வகலாசாலைக் கமிட்டி மெம்பருமான ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் அவர்கள் சென்னை சட்டசபைக்கு நாடார்களின் பிரதிநிதியாக நியமனம் பெற்றது குறித்து சந்தோஷங் கொள்வதாகத் தீர்மானித்ததென ஸ்ரீமான் ஏ. பி. நடராஜ நாடார் அவர்கள் எழுதுகிறார்.

## சுண்டங்கோட்டை.

இவ்வூரில் வருடமொருமுறை ஊர்ப் பொதுவில் அன்னதானம் நடைபெற்று வருவதேபோல் நாளது அக்ஷய வருடத்திலும் தை மீ 3 வ ஞாயற்றுக்கிழமையன்று அன்னதானம் வெகு தயாளமுடன் இரவு 6 மணிக்குத் தொடங்கி 2 மணிவரையும் வெகு மேன்மையாய் பந்தி போஜனம் நடந்தேறியது. இவ்விதம் வருடந்தோறும் நடத்துதற்கு இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம் என்று ஸ்ரீமான் க. வ. சட்டையாண்டி நாடார் எழுதுகிறார்.

## டி. ஆர். வாசகசாலை

விருதுநகர்ராய்பகதூர், த. இரத்தினசாமிநாடார் ஞாபகச்சின்ன புஸ்தகசாலை அங்கத்தினர்களின் பொதுக் கூட்டம் 13—1—27-ல் வைஸ்பிரசிடெண்ட் ஸ்ரீமான் தே. அ. மா. அருணாசலநாடார் தலைமையின் கீழ்கூடி, சுவாமி சிரத்தானந்தரின் படுகொலைக்காக வருந்துவதாகவும் அவர் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவிப்பதாகவும், அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்பதாகவும், பட்டிவீரன்பட்டி, ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் அவர்கள் சென்னைசட்டசபை அங்கத்தினராக நியமிக்கப்பட்டதற்குச் சந்தோஷப்படுவதாகவுமான தீர்மானங்களும் மற்றும் பல தீர்மானங்களும்நிறைவேற்றப்பெற்றனவென காரியதரிசிகள் அறிவிக்கிறார்கள்.

## பலதுறைக்காரிகை.

### முதல் வேலை.

சென்னைச்சட்டசபை கூடினவுடன் இந்து மத ஸ்தாபன மசோதாவை கவர்னர் ஜெனரல் அங்கீகாரம் செய்யக் கூடாதென்ற தீர்மானத்தைக்காங்கிரஸ்க்காரர் கொண்டுவருவதே அவர்கள் முதல் வேலையென்று தெரிய வருகிறது.

சுயேச்சைக்கட்சியென்று சொல்லிக் கொள்ளும் ஸ்ரீமான் கே. ஆர். வெங்கிட்டராமய்யரும் 1925-ம் வருஷத்திய மதஸ்தாபனச்சட்டங்களில் சில திருத்தங்கள் கொண்டுவருவதாக அறிவித்திருக்கிறார். தற்காலமந்திரிகள் மூவருடைய சிறிது பிடிப்பை வைத்துக் கொண்டு தங்கள் காரியத்தைச் சாதித்துவிடலாமென்று துரிதப்படுத்துகிறார்கள். இவர்கள் முயற்சி என்னவாகுமென்பதைப் பின்னால் கவனிப்போம்.

### பைத்தியமாம்.

சுவாமி சிரத்தானந்தரைச் சுட்டுக் கொன்ற அப்துல் ரஷீதின் போலீஸ் விசாரணை முடிந்து மாஜிஸ்திரேட் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. எதிர்வழக்காட வக்கீலும் வைக்கப்பட்டிருக்கிறது. டில்லியில் முஸ்லீம்களின் ஒரு ரகஸ்யக்கூட்டத்தில் கொலையாளிக்கு பணவுதவிசெய்வதாகவும் பேச்சு நடந்திருக்கிறது. ஆனால் எதிரி வக்கீல் கொலையாளிக்கு பைத்தியம் என்று கூறியிருக்கின்றாராம். கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா? அப்துல்ரஷீதுக்கு மதப் பைத்தியமென்பதில்யாது சந்தேகம்? கேஷுக்கு கமிட்டி செய்யப்பட்டிருக்கிறது.

### பறக்குந்தொழில் விருத்தி.

சர்வதேசங்களும் இனிநாட்டில் நடப்பதற்குச் சரியானவசதியில்லையென்று விரிந்த ஆகாயத்தை உபயோகப்படுத்தும் வேலைகளை வெகு துரிதமாய்ச் செய்துகொண்டுவருகின்றனசமீபத்தில் ஆஸ்திரேலியாவிலும் ஆகாயத்தொழிற்சாலையொன்று அமைத்து 625 பவுன் வீதம் ஒரு விமானம் கட்டிக் கொடுக்கலாமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகாயத்தில் 400 மைலுக்கு வெளிச்சம் தெரியக்கூடிய சர்ச்சுலைட்டும் இனி உபயோகப்படுத்தலாமாம்.

### கொடுமையான கொள்ளை.

கன்பியூஷ்யஸ் பிறந்த விடத்திலிருந்து 50 மைல் தூரத்திலுள்ளபர்வ்என்ற விடத்தில் கொள்ளைக்காரர்கள் கிராமத்தை நிலைவைத்துச் ஜனங்களை தயவின்றிக்கொன்று விடுகிறார்கள். பாக்கிவிடாமல் ஆயிரம் ஜனங்கள் கொலை செய்யப்பட்டார்களாம்.

### அருப்புக்கோட்டையில் வாலிபர் இயக்கம்.

இக்கல்லூரின் கண் வாழும் நாடார் குல வாலிபர் பலரும் ஒருங்கே சேர்ந்து நாளது தைமீ 4வ சோமவாரத்தன்று "க்ஷத்திரிய நாடார்கள் டவுன்டும் பேட்மின்ட்டன் கிளப்" என்று நாமம் பூண்டதோர் ஸ்தாபனத்தை வெகு ஊக்கத்தோடு ஆரம்பித்திருக்கிறார்கள். ஷை பேட்மின்ட்டன் விளையாடுவதற்காக நம் செக்காரநந்தவனத்திற்கு கிழக்கே அமைந்த பெரிய மைதானத்தில் வெகு அலங்காரமாக இடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அன்று காலை சூரியோதயத்திற்கு சற்று முன்னரே அருப்புக்கோட்டை லோகல் பண்டு டாக்டரும், பிரின்ஸ் ஆப் வெல்ஸ் இன்ஸ்டியூட் டென்னிஸ் கிளப் கௌரவ காரியதரிசியுமான ஸ்ரீமான் பி. சொக்கலிங்கம்பிள்ளை அவர்கள் முன்னிலையில் பூஜைகள் செய்து விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டது. ஷை ஸ்தாபனத்தின் சார்பாக 'வாலிபால்' முதலிய பல விளையாட்டுகள் நடைபெற்றுவருவதுடன் 'புட்பால்' விளையாட்டு ஆரம்பிப்பதற்கும் வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

அவ்வமயம் ஷை மைதானத்திற்கு விஜயம் செய்தோர் யாவருக்கும் சந்தனம், கற்கண்டு, தேங்காய்ப்பழம், தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றன. ஷை ஸ்தாபனம் என்றென்றும் தளராஊக்கத்துடன் நடைபெற்று நீடூழி வாழும்படி எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் நிதி.

### சொத்துகள்தான் வாங்க வேண்டும்.

மதுரை நாடார் ஊழியப்பிரகார சபையின் அபிப்பிராயம்

II

நாடார் மகாஜனங்களே!

இவ்விஷயமாய் முன் நமது மித்திரனில் வெளிவந்த நமது சபையின அபிப்பிராயத்தை பலரும் கண்டிருக்கலாம். நமது லாட்டரியின் மூலம் மீதப்படுத்திய ரூபாய் 35000-ம் பணமாக இருக்கலாமா, அல்லது சொத்தாக இருக்கலாமா என்பது இப்போது நம் முன்னுள்ள ஆலோசனை. சிலர் பணமாக இருப்பதுதான் நலமென்றும், சிலர் சொத்தாக இருப்பதுதான் அதிக நலமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அதில் எது மேல் என்று நாம் இப்போது நாம் முடிவு செய்ய வேண்டியதிருக்கிறது. பணமானது ரொக்கமாக வைக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில், முதலாவது சங்கம அபிவிர்த்திக்கும், இரண்டாவது நமது மஹா ஜனங்களின் ஐச்வரியத்திற்கும் ஹானியை உண்டாக்கவதாக விருக்கிறது. நமக்குள் ஏற்பட்டுவரும் கட்டுக்களையும், ஒற்றுமையையும் உடைத்தெறிய அநுகூலத்தை அளிக்கிறது. இன்னும் சங்கத்தின் நோக்கத்திற்கு பிரயோஜனப்படாமல் சில வருடங்களுக்குள் பணம் பூராவும் வீணாகச் செலவு செய்ய வழியும் ஏற்படலாம். இவைகள் இப்போது கற்பனை போல் தோன்றுவிட்டாலும் வரவர அனுஷ்டானத்தில் பார்க்கலாம். நமது ஜன சமூகம் இப்போதுள்ள வரையாவது உயர் நிலைமையிலும், நன் மதிப்பிலும் இருந்துவரக் காரணமென்ன வென்பதைக் கவனித்தால் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். பெரும்பாலும் நமக்கு நம் முன்னோர்களால் சேர்த்துவைக்கப்பெற்ற சொத்துகளால்தான் நன்மதிப் பேற்பட்டிருக்கிறது. ரொக்கமாகச் சேர்த்துவைக்கப்பட்ட பணங்களெல்லாம் இருக்கவிடம் தெரியாமல் மறைந்துபோய்விட்டன. பொதுவாக வாங்கிவைக்கப்பட்ட பல பேட்டைகளும், சத்திரங்களும் இப்போது நமக்கு எவ்வளவு மதிப்பையும், சௌகரியத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கிற தென்பதைக் கண்கூடாகக் காணலாம். பல தர்ம கைங்கரியங்கள் குறைவின்றி நடைபெறுவதற்கு நம் முன்னோர்களாலும், அதை அனுசரித்து நம்மாலும், சொத்துக்களே பெரும்பாலும் வாங்கி நிர்வகிக்கப்பெற்று வருகின்றன. இதில் எவ்வித செலவும், முதலுக்கு மோசமும், ஆபத்தும் ஏற்படவில்லை. ரொக்கப் பணத்தை ஆதாரமாகக் கொண்டு நடைபெற்றுவந்த பல தர்மங்களும், வித்தியாசாலைகளும், தேவாலயங்களும், பொதுச் சபைகளும், மகமை நிர்வாகங்களும் அழிந்துபோயின. அதில் முக்கியமாக மதுரையில் மிகச் சிறப்புடனும், கட்டுடனும் நடைபெற்றுவந்த சிதம்பர மகமையானது, இப்பொழுது எவ்வித ஆபத்தான நிலைமையில் இருக்கிறதென்பதையும், அதைச் சீர்திருத்த நமது தலைவர்கள் எவ்வளவோ பகீரதப் பிரயத்தனப்பட்டும் பிரயோஜனப்படாமலிருந்து வருவதையும், அப்பண்டின் பணம் சுமார் மதிப்பு ரூபாய் ஐம்பதினாயிரமும் எங்கு வைக்கப்பட்டிருக்கின்றன, எந்தப் பொறுப்பின்மேல் இருக்கின்றன என்று கூடத் தெரியாமல் இருப்பதையும் பார்த்தால் நமது நாடார் ஜன சமூகம் கண்ணீர் விடாமலிருக்க முடியாது. அதோடு, அம்மகமையால் நமக்கிருந்த செல்வாக்கும், அதிகாரமும், ஐக்கியமும் அடியோடு சிதறுண்டுவிட்டது. இதைப்போல் இன்னும் ஆபத்திலழிந்த பணமும், அதன் பலனழிந்த தர்மங்களும், ஒன்றிரண்டல்ல. நூற்றுக் கணக்காக இருக்கின்றன. வித்தியாசாலை தேவஸ்தானம் முதலிய தர்மகைங்கரியங்களை அபிவிர்த்தி செய்வதற்கும் சிறப்பாக நடைபெறுவதற்கும் நம் முன்னோர்கள் எந்த வழியைச் செய்திருக்கிறார்களோ அந்த நல்வழியைப்பின் பற்றியே நாமும் நடத்தல் அதயாவசியம். நம்மவர்கள் முக்கியமாக வசிக்கும் விருதுநகர், சிவகாசி, சாத்தூர், அருப்புக்கோட்டை முதலிய இடங்களில் ஸ்திரமாக நடைபெற்றுவரும் வித்தியாசாலை, தேவஸ்தானம் முதலிய தர்மங்கள் அவைகளுக்கென வாங்கி வைக்கப்பெற்றிருக்கும் சொத்துக்களின் வருமானத்தாலேயே ஒழுங்காக நடந்துவருகின்றன. இத்தருமங்களுக்காக எந்த பாங்கில் எவ்வளவு ரூபாய் ரொக்கமாக மூலதனம் வைக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவிக்க முன் வருவார்களா? அவ்விதமிருக்குமென நாம் அபிப்பிராயப்படுவதற்கில்லை. ஆதலால் அடுத்து மதுரையில் கூடப்போகும் ஜெனரல் மீட்டிங்கில் ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் நிதிக்கு சொத்துக்களே வாங்க வேண்டுமெனத் தீர்மானிக்கும்படி நாடார் மகாஜன சங்க அங்கத்தினர்களை வேண்டிக் கொள்கிறோம்.

---

## சாத்தங்குடியில் வருடப்பூர்த்திவிழா.

இவ்வூர் பால்ய நாடார்கள் லைபரரி அண்டு ரீடிங்ரூமின் இரண்டாம் வருடப்பூர்த்திக் கொண்டாட்டம் 30—12—26 மாலை ரீடிங்ரூம் முன்பாக அமைக்கிருந்த கொட்டகையில் ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் டி. ராஜையா நாடார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. கடவுள் வணக்கம் அய்யர்பெருமான் ஆச்சாரியால் சொல்லப்பட்டு காரியதரிசி எஸ். பி. சேலை நாடார் அவர்களால் ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது.

வாசகசாலையின் உபயோகம், மானிட ஜீவியத்தின் கருத்து, பெண் கல்வி, நதரும் தேச முன்னேற்றமும், கட்டு, சுகாதாரம், கல்வி, பிள்ளைகள் மட்டில் பெற்றோர் கடமை, நமது மனப்பான்மை முதலிய விஷயங்களைப் பற்றி முறையே ஏ. இஸ்ரவேல் உபதேசியார், ஜி அடைக்கலசாமி பிள்ளை, ஜி அவண நாடார், எஸ். வேசமுத்து சேர்வை, நாடார் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஜி சுந்தரம், ஏ. வடமலை நாடார், ராமமுனிசிப்சங்கரநாராயண பிள்ளை, ஜி அற்புதசாமி பிள்ளை, எம். எஸ். பி. முத்துக்கருப்ப நாடார் பி. ஏ. ஆகியவர்கள் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பஜனைக் கோஷ்டியாரால் பஜனை பாடப்பட்டு, அக்கிராசனாதிபதியின் முடிவுரைக்குப் பின் காரியதரிசி வி. ஆண்டியப்ப நாடாரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை இனிது கலைந்தது.

31—12—26 வெள்ளிக்கிழமை இவ்வூர் க்ஷத்திரிய நாடார் வித்தியாசாலையின் ஏழாம் வருஷப் பூர்த்திக் கொண்டாட்டமும், பரிசளிப்பு ஸபையும், பால்ய நாடார் லைபெரரி அண்டு ரீடிங்ரூம் முன்பாக அமைத்திருந்த கொட்டகையின்கண் ஸ்ரீமான் எம். எஸ். பி. சோலை நாடார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. ஸ்கூல் மாணவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்றது. மானேஜர் ஜி. அவண நாடாரால் ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது.

பரீட்சையிலும், விளையாட்டுகளிலும், முதன்மையாய்த் தேறியவர்களுக்கும், பாடசாலையில் வாசித்துவரும் மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவிகளின் கும்மி, கோலாட்டங்களுக்குப்பின் அக்கிராசனாதிபதி முடிவுரை கூறி மாணவ மாணவிகளுக்கு சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு வந்தனோபசாரத்துடன் கொண்டாட்டம் இனிது முடிவடைந்தது.

வி. ஆண்டியப்ப நாடார்.

---

## சிரத்தானந்தரின் பிரார்த்தனை தினம்.

### அருப்புக்கோட்டை.

சுவாமி சிரத்தானந்தரின் பிரார்த்தனை தினமாக இந்தியாவெங்கும் கொண்டாட ஏற்பட்ட நாளாகிய அக்ஷய ஹூ மார்கழி மீ 25உ யன்று இரவு 9-30-மணிக்கு ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியரவர்கள் தலைமையின் கீழ் முதலாளி மு. மு. ஞாபகச் சின்ன வாசகசாலையின் அங்கத்தினர்களின் ஸ்பெஷல்கூட்டம் ஒன்று கூடியது. தவ்வமயம் சுவாமிஜீயின் மரணத்திற்கு அனுதாபம்காட்டியும் சுவாமிஜீயைக்கொன்ற கொலைபாதகனின் கோரச்செய்கையைக் கண்டித்தும் சுவாமிஜீயின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்தித்தும் ஓர் பிரேரணையை நண்பர் திருமேனிநாதர் அஜாசெய்து சுவாமிஜீயின் சரித்திரத்தை மிகவும் சுருக்கமாக எடுத்துரைத்தார். அதை ஆமோதித்தும் ஆதரித்தும்கனம் கருப்பையா பிள்ளையவர்களும் எ. கே. அண்ணாமலைநாடார் அவர்களும் ஆ. கு. அ. இ. இளையபெருமாள் நாடாரவர்களும் விரிவாக பல விஷயங்களை உதாரணங்களுடன் சுட்டிக்காட்டி சுவாமிஜீயின் அரியகுணங்களையும் கொள்கைகளையும் எடுத்து விளக்கினார்கள். அதன்மேல் அக்கிராசனரும் வெகு விரிவாகத் தனது அபிப்பிராயத்தை எடுத்துரைக்கையில் தீண்டாமையையும் சுவாமிஜீயின் தொண்டையும்பற்றிப் பேசினார். கடைசியில் தீர்மானம் எல்லோராலும் எழுந்து நின்று பக்தியுடன் நிறைவேற்றப்பெற்றது.

இவ்வாசகசாலையின் மாஜி காரியதரிசியும் நிர்வாக அங்கத்தினருமான மகா-ள-ள-ஸ்ரீ அ. பெ. இரத்தினவேல்நாடார் அவர்களின் அருமைப் பத்தினியார் அகாலமரணமடைந்ததைக்குறித்து ஆழ்ந்தஅனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாக ஓர் தீர்மானமும் நிறைவேற்றப்பெற்று வந்தனோபசாரத்திற்குப்பின் கூட்டம் இனிது கலைந்ததென்று நண்பர் சிவ. கு. சுப்பிரமணியன் எழுதுகிறார்.

---

### ஏழாயிரம்பண்ணை.

இவ்வூர் பால்ய நாடார்சங்கம் ஆதரவில் சுவாமி சிரத்தானந்தஜீ அவர்களின் உருவப்படம் 9—1—27 மாலை 6-மணிக்கு சங்கம் ஆபீஸிலிருந்து தேசியபஜனையுடன் ஊர்வலம் வந்தது. மாரியம்மன் கோவில் இரதத்தின் முன்பு பிரார்த்தனைக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஸ்ரீமான் ப. இ. செல்லையாத் தேவர் அவர்கள் தலைமை வகித்தார். அக்கிராசனரவர்கள் சுவாமி அவர்களின் அரிய சேவையைப் பாராட்டியும் சுவாமிகளின் சரிதையை விளக்கியும் சுவாமிகள் கொல்லப்பட்ட விஷயத்தை விளக்கியும் ஆத்மாசாந்தியடையுமாறு நாம் ஒவ்வொருவரும் கடவுளை பிரார்த்திக்க வேண்டுமென்றும் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்றும் பேசினார். அதை ஆமோதித்து ஸ்ரீமான் ச. ரா. ரா. காளியப்பநாடாரால் பேசப்பட்டு ஸ்ரீமான் மு. ச. வன்னியநாடாரால் ஆதரிக்கப்பட்டு ஸ்ரீமான் தி. ச. சுப்பய நாடார் ஹிந்து மதம் என்னும் விஷயத்தைப் பேசியவுடன் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

ச. ரா. ரா. காளியப்பநாடார்,

---

### நாடார் பரிபாலன சங்கம், விருதுநகர்.

சுவாமி சிரத்தானந்தர் அவர்களின் மரணத்தைக் குறித்து இச்சங்கத்தின் அனுதாபக் கூட்டமொன்று சென்ற 9—1—27-ல் இந்நகர் ஹிந்தி உபாத்தியாயர் துரைராஜ்பிள்ளை அவர்களின் தலைமையின் கீழ் கூடிற்று. அவ்வமயம் நண்பர்கள் பலர் சுவாமி அவர்களின் ஜீவிய சரித்திரத்தைப்பற்றியும் அவர் நம் இந்துசமுகத்திற்காகவும் ஒதுக்கப்பட்டவர்களுடைய மேன்பாட்டுக்காகவும் செய்துள்ள அரிய வேலைகளைப்பற்றிப் பேசிதுரைத்தார்கள்.

எ. பி. நடராசன்.

---

## மதிப்புரை.

### ஜகன் மோகினி.

இஃதொரு மாதர் சஞ்சிகை. தெள்ளிய தமிழ் நடையோடு கூடிய கதைத்தொகுதி. கதையின் அமைப்பு, வாசிப்போர் கவனத்தைப்பற்றி யிழுக்கும் பான்மையில் நீதியும், நன்னெறியும் பொதிந்த தன்மையதாயிருக்கிறது. வருட சந்தா ரூ 1—8—0. வேண்டுவோர் ஜகன்மோகினி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

### "மாருதி"

இந்நாமம் கொண்ட தமிழ் மாதச் சஞ்சிகை யொன்று கிடைக்கப்பெற்றோம். இதன் ஆசிரியர் திருத்தவனி மகாத்மா காந்தி ஜோஸியர் ஸ்ரீமான் வி. கே. சடகோபாலாச்சாரியாரவர். தற்காலத்திற்கேற்ப ராஜீய தேசியக் கட்டுரைகளைத் தாங்கி சிற்பதுடன் பொதுச் சமாச்சாரம், வைத்தியம், நீதி வாக்கியங்கள், பஞ்சாங்கம் ஆகிய வைகளைச் சந்தத்தேகொண்டுவெளி வருகின்றது. வருட சந்தா உள் நாடு ரூ 1—0—0. வேண்டுவோர் தபாற்பெட்டி நிர் 157. மதராஸ் என்ற விலாசத்திற்கெழுதவும்.

---

### அச்சுத் தொழில்.

முக்கியமாய் அதன் பெயருக்கேற்ப அச்சுத் தொழிலாளிகளின் மேன்மை குறித்தும் அச்சுத் தொழிலின் சிறப்புகுறித்தும் மாத வெளியீடாகக் காரைக்குடியினின்றும் பிரசுரிக்கப் பெறுகிறது. வருட சந்தா இரண்டு ரூபாய். அச்சுத் தொழிலின் அப்பியாச முறைகளைத் தெளிவாய்த் துலக்கும் திறமுடைத்தாதலின் அச்சு வேலையில் பழகுவோருக்கு இது பயனளிக்குமென நம்புகிறோம். விரும்புவோர் எழுதிப் பெறுக.

---

### சுதேச நண்பன்.

மேற்கண்ட பெயர் பூண்ட செந்தமிழ் மாதச் சஞ்சிகையின் முதல் பிரதியொன்று நமது பார்வைக்குக் கிடைக்கப்பெற்றோம். ஸ்ரீமான் எ. கே. எ. முஹம்மது இப்ராஹீம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு முஸ்லீம் ஜன சமூக நலங்கருதி வெளியிடப் பெறுகிறது. கைத்தொழில், வியாபாரம், உலக ஞானம் ஆகிய விஷயங்களால் நிரம்பப் பெற்றிருக்கிறது. வருட சந்தா ரூ 2. வேண்டுவோர் சுதேச நண்பன காரியாலயம், 63. 29 வது வீதி இரங்கூன் என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

### பாரத விருக்ஷம்.

இப்பெயர் புனைந்த, தேசியக் கீதங்களடங்கிய புஸ்தகமொன்று பிரசுரகர்த்தா கொழும்பு மகா-ள-ள-ஸ்ரீ கே. எஸ். தர்மலிங்க பூபதி அவர்களிடமிருந்து வரப்பெற்றோம். ஆசிரியோர் படத்துடன் கூடியது. விலை அணா 4. தேசிய மணங்கமழ பல நூதன மெட்டுகளில் விருதுநகர் ராஜ பார்ட் மகா-ள-ள-ஸ்ரீ வி. ஏ. சின்னமணி பாகவதரவர்கள் ஆக்கியுள்ளார். ராஜீய அடிமையுற்ற நம் இந்திய நாட்டில் இத்தகைய தேசியப் பாக்கள் நிரம்பிய பிரசுரங்கள் பெரிதும் பயன்பெறுவனவாகும். பிரதிகள், கொழும்பு 53 செட்டி தெரு, கே. எஸ். தர்மலிங்க பூபதி அவர்களிடம் கிடைக்கும்.

---

### கியாலண்டர்கள் வரவு.

இரங்கூன் நவீனகதா புத்தகசாலை 1, சிவகாசி ஹவிபர் தீப் பெட்டி தொழிற் கம்பெனி 2, ஜோஹூர் பாரு எஸ். கோவிந்தசாமி நாடார் 3, இரங்கூன், தென்காஞ்சி சாமிவேல் மெடிக்கல்ஹால் 4, சென்னை செல்சன் கம்பெனி 5, அருப்புக்கோட்டை தனலெக்ஷ்மி சோடா கம்பெனி 6, ஆகிய இடங்களிலிருந்து 1927-வது புது வருஷத்திய நேர்மையான கியாலண்டர்கள் வரப்பெற்றோம். அன்புகுறித்தனுப்பிய அவர்களுக்கு நமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நல்ல தருமம்! நல்ல தருணம்!! நல்ல லாபம்!!!

## அருப்புக்கோட்டை

## "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி

## தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

## மொத்தம் சீட்டுகள் 33000.

சீட்டு 1-க்கு ரூ 1.

## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-௵ மே மீ 4 உ க்கு பிரபவ ௵ சித்திரை மீ 22 உ பிரைஸ் எடுக்கக்கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

2-வது பிரைஸ் ரூ 1500     3-வது பிரைஸ் ரூ 1000
4-வது பிரைஸ் ரூ 500

| | | | |
|---|---|---|---|
| 200 ரூ-ல் 2-க்கு ரூ | 400 | 100 ரூ-ல் 5-க்குரூ | 500 |
| 250 ரூ-ல் 0-க்கு ரூ | 1000 | 20 ரூ-ல் 50-க்குரூ | 1000 |
| 10 ரூ-ல் 100-க்குரூ | 1000 | 5 ரூ-ல் 200-க்குரூ | 1000 |
| 3 ரூ-ல் 600-க்கு ரூ | 1800 | 2 ரூ-ல் 2400-க்குரூ | 4800 |

ஆக பிரைஸ்கள் 3881-க்கு ரூ 17500
புக் 1500-க்குக் கமிஷன் ரூ 3000
குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் வகையறாக்கள் ரூ 1800
தனிப் பிரைஸ் ரூ 1700     பண்டுக்கு ரூ 9000
ஆக ரூ 33000

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

### விசேஷக் கமிஷன்.

நூறு ரூபாய்க்கு மொத்தமாகச் சீட்டு விற்றுக் கொடுப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் விசேஷக் கமிஷன் கொடுக்கக்கூடும்.

### தனிப் பிரைஸ் விபரம்.

1-வது பிரைஸ் ரூ 100     2-வது பிரைஸ் ரூ 50
3-வது பிரைஸ் ரூ 20     4-வது பிரைஸ் ரூ 15
5-வது பிரைஸ் ரூ 10
6-முதல் 10 வரை 5 விதம் ரூ 25
11-முதல் 750-வரை 2 விதம் ரூ 1480
ஆக ரூ 1700

தனிப் பிரைஸ், இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகள் பத்துப் பிரைஸ்களே இருப்பதால் 22 சீட்டுள்ள இரண்டு புஸ்தகம் விற்றவர்கள் தனிப் பிரைஸுக்காக ரூ 2-ம் பிடித்துக் கொண்டு ரூ 38 மட்டும் அனுப்பலாம். தனிப் பிரைஸில் சேர்ந்து கொள்ள விருப்பமுடையவர்கள் தனிப் பிரைஸ் ரூ 2 பிடித்துக் கொள்ளாமல் ரூ 40-ம் அனுப்பிவைக்கவேண்டும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்கள் விசேஷக் கமிஷன் ரூ 5 ம் பிடித்துக்கொண்டு மீத ரூபாயை அனுப்பி வைக்கலாம். தனிப் பிரைஸுக்குரிய ரூபாயை அனுப்பினால் தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ளப்படும். அதற்குப் பிரியமில்லையானால் அதற்குரிய ரூ 5 யும் பிடித்துக் கொண்டனுப்பலாம்.

சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.
சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

பிரத்தியக்ஷத்தில் பார்த்துவருகிறோம். சில மத ஸ்தாபனங்களின் கணக்குகளே வெளியிடப்படுவதில்லை. டிரஸ்டிகள் அவைகளைத் தங்களுடைய சொந்த சொத்துக்களாகப் பாவிக்க ஆரம்பித்துவிட்டனர், பிறரை அவர்கள் சட்டை செய்வதில்லை. பொது ஸ்தாபனங்கள் அன்றன்றுடம் கிடைத்து வரும் வரும்படியைக் கொண்டே நடந்து வர வேண்டும். பொது ஜனங்களுடைய ஆதரவைப் பெற முடியாத ஸ்தாபனம் இருந்து வரவேண்டியதேயில்லை. ஒரு ஸ்தாபனம் ஜனங்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருக்கிறதாவென்பதை வருஷா வருஷம் அதற்குக் கிடைத்து வரும் சந்தாத் தொகைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு ஸ்தாபனமும் இந்தப் பரீக்ஷையில் தேறவேண்டுமென்று நான் நினைக்கிறேன். ஆனால் ஒருவரும என்மீது தப்பபிப்பிராயம் கொண்டுவிடவேண்டாம். சாசுவதமான கட்டடங்கள் இல்லாமல் நடந்து வரமுடியாத பொது ஸ்தாபனங்களைப்பற்றி நான் பிரஸ்தாபிக்கவில்லை. கடை முதல் செலவை சந்தாத் தொகைகளிலிருந்தே ஈடு செய்து கொள்ள வேண்டுமென்றுதான் நான் சொல்லுகிறேன்.

இந்த அபிப்பிராயமானது தென்னாப்பிரிக்காவில் ஸத்தியாக்கிரஹ இயக்கம் நடந்து வந்த காலத்தில் ஊர்ஜிதமடைந்தது. இந்த மகத்தான போராட்டத்திற்கு லட்சக்கணக்காகப் பணம்

### இராமநாதபுரம் இளைய ராஜா.

இராமநாதபுரம் இளைய மகாராஜா ஸ்ரீராஜாராம் பாண்டியர் ஓர் பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்து பின்வருமாறு பேசினர்.

இந்த பொதுக் கூட்டத்தில் நான் தலைமை வகித்தது எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. எனக்கு வெகு நாளாக தேசத்தில் வேலை செய்ய வேண்டுமென்ற அவா உண்டு. இங்குள்ள பிரசாரகர்கள் போல் நான் வேலை செய்யாமற்போயினும் என்னுடைய தேசம் அடிமைப்பட்டிருப்பதைப் பார்க்க என் மனம் ஒப்பவில்லை. என்னுடைய தேசத்தை நான் எப்பொழுதும் தெய்வம்போல் வணங்குபவனே. இப்போதுதான் இந்த தேசாபிமானக் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளுகிறேன். இனி என்

வேண்டியிருந்த போதிலும் 6 வருஷ காலம் சாசுவதமான நிதியில்லாமலே இந்த இயக்கம்நடந்துவந்தது. அடுத்த நாள் பணம் கிடைக்காவிடில் என்ன செய்வதென்று நான் யோசித்த சந்தர்ப்பங்களும் பல உண்டு. ஆனால் நாளைக்கு என்ன நடக்கிறதோவென்று நான்கவலைப்படுவதில்லை. நான்பின்னே சொல்லப்போகும் விருத்தாந்தத்திலிருந்து இந்த அபிப்பிராயமே சரியானதென்பதை நேயர்கள் அறிந்து கொள்ளலாம்.

னால் எவ்வளவு தேசத்திற்குச் செய்யக்கூடுமோ அவ்வளவையும் செய்து வருவேன். நீங்கள் அனைவரும் என்னுடன் ஒத்துழைத்து காங்கிரஸ் அதிகச் சிறப்புடன் நடைபெறச் செய்வதற்கு வேண்டிய ஒத்தாசை புரிவீர்களென்று நம்புகிறேன். எனது நண்பர் காலஞ்சென்ற ஸ்ரீமான் எஸ். டி. கிருஷ்ணய்யங்காருக்காக கூட்டப்பட்ட அனுதாபக் கூட்டத்தில் நானும் பங்கெடுத்துக் கொண்டதற்காக சந்தோஷப்படுகிறேன்.

### மகாத்மாவின் புகழ்.

### கவி சிரேஷ்டர் சொல்லும் விவரம்.

டாக்டர் ரவீந்திரநாத் டாகூர் மேல்நாட்டுக்குச் சென்று சென்ற மீ 18உ சென்னை வந்து சேர்ந்தார். அவரை ஒரு பத்திரிகா நிருபர் பேட்டிகண்டு பேசுகையில் அவர் சொன்னதாவது:- என்னை இத்தாலியில் மிஸ்டர் முஸோலனி வரவேற்ருர். அங்கு கவர்ன்மெண்டின் விருந்தினராய் இருந்தேன். சுவிஜர்லாந்தில் ரோமன் ரோலண்டுடன் வசித்துவந்தேன். இங்கிலாந்தில் சமஸ்தான வித்வான்களைக் கண்டு பேசினேன். சுவீடனுக்குச் சென்று டாக்டர் கான்ஸலைக் கண்டு பேசினேன். சமஸ்கிருத பாஷையில் விற்பன்னராயிருக்கும் டாக்டர் ஸ்டேன்கோனைக் கண்டு பேசினேன். ஜெர்மனியில் மிக்க மரியாதையுடன் வரவேற்கப்பட்டேன். வான்ஹிண்டன்பர்க் என்னை உபசரித்தார். கிரேக் கவர்ன்மெண்டார் என் வருகையை முன்னிட்டு பெரிய விருந்து நடத்தி எனக்கு பட்டமுமளித்தனர். எகிப்தில் பார் அரசனைக் கண்டு பேசினேன். மேனாட்டினர் இந்திய விஷயத்தில் விசேஷ அக்கறை காட்டுகின்றனர். நம் வேலைகளையும் பாராட்டுகின்றனர். என்னை எங்கும வரவேற்று அன்புடன் உபசரித்தனர். மகாத்மா காந்தி விஷயத்திலும், ஸர். ஜே. ஸி. போஸ் விஷயத்திலும் அவர்கள் கொண்டுள்ள மதிப்பும், மரியாதையும் எனக்கு மிக்க மகிழ்ச்சியை யளித்தன. கீழ் நாட்டினைப் பற்றி விஷயமறிந்து கொள்ள இப்போது மேல்நாடுகளில் ஒரு ஆவல் இருந்துவருகிறது என்று சொன்னார்.

### கண்ணாடியின் பலம்.

கண்ணாடிக்கிருக்கும் பலம் எவ்வளவு என்பது பின் வரும் விஷயத்தால் நன்கு விளங்கும்:— ஓரிடத்திலே நான்கு மூலைகளில் நான்கு காலியான கண்ணாடிச் சீசாக்களை வைத்து, அதன் மேல் ஓர் பலகையை வைத்து அப்பலகையின்மேல் 13,000 பவுண்டு எடையுள்ள ஒரு யானையை நிறுத்தியும், அக்கண்ணாடி சீசாக்கள் உடையவில்லையாம். யானையின் பாரத்தைத் தாங்கமுடியாமல் சீசாக்களில் ஒன்று அப்பலகையைப் பொத்துக் கொண்டு மேலே வந்துவிட்டதாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## புலனடக்கம்.

### நல்வாழ்வின் முதற்படி.

(முன் தொடர்ச்சி.)

மனிதர்கள் இந்திரிய சுகபோகங்களுக்கும் சிற்றின்ப ஆசைகளுக்கும் அடிமைகளாயிருந்துகொண்டே பயனுள்ள நல்வாழ்க்கை நடத்தலாமென்னும் எண்ணம் அதி ஆச்சரியமான ஒரு மாயையாகும். வருங்காலத்தில் நமது சந்ததிகள் இக்காலத்துப் பணக்கார வகுப்பினரின் வாழ்வு முறையை எண்ணிப்பார்க்கும்போது, இதை "நல்வாழ்வு" என்று சொல்லிக்கொண்ட நமது மடமையை எண்ணிப் பெரும் வியப்புறுவார்களென்பதில் ஐயமில்லை. நமது வழக்கமான எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் ஒரு கண நேரம் ஒதுக்கிவைத்துவிட்டு நமது வாழ்வு முறையைப் பற்றிச் சற்றே சிந்தித்தாலும் நல்வாழ்வைப் பற்றிப் பேசுவதற்கே நாம் தகுதியற்றவர்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெளிவாக விளங்கும். தற்காலத்தில், பணக்கார வகுப்பையோ, மத்திய வகுப்பையோ சேர்ந்த மனிதன் ஒருவன் நல்வாழ்க்கை தொடங்க உண்மையிலேயே விருப்பங்கொண்டவனாயின் முதன் முதலில் அவன் தான் கைக்கொண்டுள்ள தீய வாழ்வு முறையை விட்டொழித்தல் இன்றியமையாதது.

வாழ்க்கையைச் சீர்ப்படுத்திக்கொள்ளாததற்கு ஒரு விநோதமான காரணம் பலராலும் கூறப்படுவதை நாம் அடிக்கடி கேட்கிறோம். எல்லாரும் ஒரு வழி செல்கையில் நாம் மட்டும் தனி வழியே செல்லுதல் கேலிக்கிடமாகுமென்றும், இயற்கைக்கு மாறுபட்டதாகத் தோன்றுமென்றும், நமது பெருமையை வெளிப்படுத்திக்கொள்வதற்காகச் செய்யுங் காரியமெனப் பிறர் எண்ணக்கூடுமென்றும் சொல்லப்படுகின்றன. ஜனங்கள் தீய வாழ்விலிருந்து நல்வாழ்வுக்குத் திரும்புவதைத் தடுப்பதற்கென்றே சைத்தான் இந்த வாதத்தைச் சிருஷ்டி செய்தான் போலும்! ஜனங்களின் வாழ்வு முழுதும் நல்லதாயும், நீதிக்குப் பொருந்தியதாயும், அன்பு நிறைந்ததாயும் இருக்குமானால் மட்டுமே வழக்கத்துக்கு விரோதமில்லாமல் செய்யும் காரியம் எல்லாம் நல்லதாயிருக்க முடியும். மக்களின் வாழ்வில் பாதி நல்லதாயும்; பாதி கெட்டதாயுமிருப்பின் ஒருவன் சில நற்காரியங்களேனும் வழக்கத்துக்கு மாறுபாடின்றி கேலிக்கிடமின்றிச் செய்யக்கூடும். ஆனால் இக்காலத்துப் பணக்கார வகுப்பாரின் வாழ்க்கையைப் போல், வாழ்க்கை முழுதும் தவறாயும், தீயதாயும் இருக்கும்போது மனிதன் வழக்கத்துக்கு மாறுகப்போகாமல் ஒரு நல்வினையேனும் நிகழ்த்த இயலாதன்றோ? நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன் ஆதல் போல், அத்தகைய ஜனசமூகத்தில் ஒருவன் நல்வினை ஒன்று செய்தாலும் அஃது அதிசயமானதாய், கேலிக்கிடமானதாய் ஆகிவிடுகிறது! ஆனால் தீவினைகள் எவ்வளவு செய்தாலும் அதிசயமாகத் தோன்றுவதில்லை.

இவ்வாறு பிறர் நகைப்பார்களே என்னும் அச்சத்தினின்றும் ஒருவன் விடுபட்டுத் தீயவாழ்வு முறைகளை விட்டொழித்தாலன்றி அவன் நல்வாழ்வு நடத்த முயலுதல் வீண்முயற்சியேயாகும். சுகபோகங்களில் மூழ்கிக்கிடக்கும் ஒருவன் ஒருகாலும் அறவாழ்க்கை நடத்த முடியாது. ஒருவனுடைய வாழ்க்கை நல்லதா, தீயதா என்று கண்டுபிடிப்பதற்குரிய சோதனையாது? அவன் தன்னிடம் எத்துணை அன்பு செலுத்துகிறான், பிறரிடம் எத்துணை அன்பு செலுத்துகிறான் என்னும் கணக்கைக்கொண்டே அவனது வாழ்க்கையின் இயல்பை அறிதல் வேண்டும். ஒருவன் தன்னிடம் எவ்வளவு குறைவான அன்பு செலுத்துகிறானோ, பிறரிடம் எவ்வளவு அதிகமாக அன்பு செலுத்துகிறானோ அவ்வளவுக்கு அவனுடைய வாழ்வு நல்வாழ்வாகின்றது. உலகிலே இதுகாறும் தோன்றியுள்ள மகான்கள் எல்லாருக்கும் நல்வாழ்வைக்கண்டறிய இதுவே சோதனையாயிருந்தது. சாதாரண ஜனங்களுக்கும் இதைவிடச் சிறந்த சோதனை வேறில்லை. ஒருவன் பிறருக்கு எவ்வளவு அதிகமாகக் கொடுத்துத் தனக்கு எவ்வளவு குறைவாகக் கேட்கிறானோ அவ்வளவுக்கு அவன் நல்லவன்; உயர்ந்தவன். இதற்கு மாறாக, தனக்கு அதிகமாகக் கேட்டுப் பிறருக்குக் குறைவாகக் கொடுப்பவன் கெட்டவன்; தாழ்ந்தவன்.

இது மட்டுமன்று. ஒருவன் தன்னிடம் அன்பு செலுத்தினனாயின், பிறரிடம் அவனுடைய அன்பு அந்த அளவுக்குமட்டும் குறைவதில்லை; அதைவிடப் பன்மடங்கு அளவுக்குக் குறைந்துபோகிறது. ஓர் உதாரணம் கூறுகிறேன். ஒருவனிடம் உணவு நிறைய இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவன் அதைப் பிறருக்கிடாமல் தானே அதிகமாகச் சாப்பிட்டு விடுகிறானென வைத்துக்கொள்வோம். இதனால் அவன் மீதியைப் பிறருக்குக் கொடுக்க முடியாமற்போவதோடு அளவுக்கு மிஞ்சி உணவருந்தியதால் அவனும் நோய்வாய்ப்பட்டுப் பிறருக்கு உதவும் சக்தியை இழக்கின்றான். பிறரிடம் சொல்லளவில் இன்றி உண்மையிலேயே அன்பு செலுத்த வேண்டுமாயின், சொல்லளவிலின்றி உண்மையிலேயே ஒருவன் தன்னிடம் அன்பு செலுத்துவதை விட்டுவிடவேண்டும். பெரும்பாலும் என்ன நடக்கிறதெனில், நாம் பிறரை நேசிப்பதாக நினைத்துக் கொள்கிறோம்; உண்மையில் அவர்களை நாம் நேசிப்பது சொல்லளவிலே தான். பிறருக்கு உணவளிக்கவும், உறங்கப்படுக்கை கொடுக்கவும் நாம் மறந்து விடுகிறோம். நாம் உண்பதற்கும், உறங்குவதற்குமோ ஒருகாலும் மறப்பதில்லை. நமக்கு நாம் உணவளித்துக் கொள்ளவும் பிற சௌகரியங்கள் செய்து கொள்ளவும் மறந்துவிடும் போது தான் பிறரிடம் உண்மையாகவே அன்பு செலுத்துதல் சாத்தியமாகும்.

புலன்களுக்கு அடிமைப்பட்டுச் சுகபோக வாழ்வு நடாத்தும் ஒருவனை "நல்லவன்" என்றும் "நல்வாழ்க்கை" நடத்துகிறான் என்றும் சொல்லுதல் இக்காலத்தில் சாதாரணமாகி விட்டது. உயர்ந்த எஃகினால் நன்றாகச் செய்யப்பட்ட கத்தியானாலும் தீட்டப்படாவிடின் எப்படி நன்றாய் வெட்டாதோ அவ்வாறே ஒருவன் அடக்கம், பொறுமை, இனிய பேச்சு முதலிய நற்குணங்களைப் பெற்றவனாயிருப்பினும் அவன் 'நல்லவன்' ஆகமாட்டான். எவனொருவன் பிறரிடமிருந்து தான் பெறுவதைவிடத் தான் பிறர்க்கு அதிகம் கொடுக்கிறானோ அவனே 'நல்லவன்' என்று சொல்லப்படத்தகுரியவன். இந்திரிய சுகங்களுக்கு அடிமையான ஒருவனுக்கு இது கைகூடாததொன்றும். முதலாவதாக, சுகபோகங்கள் பழக்கமாகிவிட்ட அவனுக்குத் தேவைகள் மிக அதிகம். எனவே பிறருடைய ஊழியத்தை அவன் பெற வேண்டிவருகிறது. இரண்டாவதாக, அவன் பிறரிடமிருந்து பெறுவதையெல்லாம் உபயோகப் படுத்துவதால் தன்னைத் தானே பலவீனப் படுத்திக் கொள்கிறான். இதனால் உழைக்கவும், பிறருக்கு ஊழியம் செய்யவும் அவனுக்கு இயலாமல் போகிறது. பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கவும், கொழுப்புள்ள இனிப்பான உணவு வகைகளையும் பானங்களையும் அருந்தவும், தட்பவெப்ப நிலைக்குத் தகுந்தாற்போல் ஆடம்பரமான உடைகள் அணிந்து கொள்ளவும் வழக்கப்பட்டுப் போன ஒருவன், கடினமான உடல் உழைப்புச்செய்து பழக்கமில்லாத ஒருவன், உண்மையிலேயே நல்ல காரியம் எதுவும் செய்ய முடியாது.

இவ்வுலக வாழ்வில் நமக்குப் பொய்கள் பெரிதும் வழக்கமாய்ப்போயின. பிறர் நமது பொய்களை நுணுகி ஆராய்தல் கூடாதென்று நாம் விரும்புவதால் நாமும் பிறருடைய பொய்களைப்பற்றிக் கவலைகொள்வதில்லை. பொய்யையும் மெய்யென்று நம்புவதே நமக்குச் சௌகரியமாயிருக்கிறது. எனவே, இந்திரிய சுகானுபவங்களில் மூழ்கி வாழும் மாந்தர்கள் "நல்லவர்கள்" என்றும், சில சமயங்களில் "மகான்கள்" என்றுங்கூடச் சொல்லப்படும் போழ்து நாம் ஆச்சரியப்படுவதில்லை; ஐயுறுவதுமில்லை. சாதாரணமாக இக்காலத்தில் பணக்காரன் ஒருவன் எத்தகை வாழ்வு நடாத்துகிறான் என்று சற்று சிந்திப்போம். சுகமான 'ஸ்பிரிங்' கட்டிலில் மெத்தை விரித்து அதன்மீது சுத்தமான விரிப்புகள் போட்டுத் தலைக்கும், காலுக்கும், பக்கங்களுக்கும் தலையணைகளுடன் அவன் நித்திரை செய்கிறான். விலையுயர்ந்த போர்வைகள் குளிர் அவனிடம் நெருங்காமல் பாதுகாக்கின்றன. இவன் சுறுசுறுப்புக்காரனாயிருந்தால் சூரிய உதயத்துக்கு எழுந்திருக்கிறார். எட்டு மணி, ஒன்பது மணிவரை உறங்கும் சோம்பேறிகளும் உண்டு. அவனுக்கு நீண்ட நேரம் முன்பே எழுந்திருந்து வேலைக்காரர்கள் எல்லாம் ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார்கள். பல் துலக்குவதற்குத் தண்ணீர், புருஷ் முதலியவையும் குளிப்பதற்கு வெந்நீர், சவர்க்காரம் முதலியவையும் தயாராயிருக்கின்றன. க்ஷவரம் செய்வதற்கும், எண்ணெய் தேய்த்துவிடுவதற்கும் ஆட்கள் காத்திருக்கின்றனர். இஃதெல்லாம் ஆனதும் அச்செல்வன் நிலைக் கண்ணாடியின் முன்பு உடையணிந்து கொள்கிறான். அவன் முதல்நாள் அணிந்து நாசம் செய்த அழுக்குத் துணிகள் சுத்தமாகச் சலவை செய்யப்பட்டு மடித்துவைக்கப்பட்டிருக்கின்றன. உடையணிந்ததும் அவன் தலை மயிரைச் சீவி ஒழுங்கு செய்து கொள்கிறான். மூக்குக் கண்ணாடி, கைக்குட்டை, தங்கச் சங்கிலியுடன் கைக் கடிகாரம், சில்லரையும் நோட்டுகளும் அடங்கிய பணப்பை முதலியவற்றை மறவாமல் எடுத்துக்கொண்டு புறப்படுகிறான்—எங்கே? உணவருந்துவதற்கு!

(இன்னும் வரும்.)

## கதர் விலைக் குறைவு.

30—12—26 உ மாலை 4-மணிக்கு திருப்பூர் அகில பாரத சர்க்கா சங்கத்தில் கதர் விலை நிர்ணய விஷயமாய் கதர் வியாபாரிகள் கூட்டத்தின் நடவடிக்கைக் கூட்டத்திற்கு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். சுமார் 25 வியாபாரிகள் ஆஜராயிருந்தார்கள்.

தற்காலம் பஞ்சு விலைக் குறைவை உத்தேசித்து அடியிற் கண்டபடி வெளளைக் கதர் துணி (காரிக் கதர்)க்கு விலை குறைக்கப்பட்டதென்று சர்க்கா சங்க காரியதரிசி ஸ்ரீமான் இராமநாதன் அவர்களால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இதை ஸ்ரீமான் எம். வி. கருப்பண்ண செட்டியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏக மனதாய் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஈரிழை கோட்டிங் தினுசுகளுக்கு கலர், சாதா எல்லா தினுசுகளுக்கும் முன் இருந்த விலைக்கு கஜம் 1-க்கு அரையணா குறைப்பது என்றும் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. 54,, சாதா காதி கஜம் 1-க்கு | | | 0—10—0 |
| 2. 50" | ,, | ,, | 0—9—0 |
| 3. 45" | ,, | ,, | 0—8—0 |
| 4. 40" | ,, | ,, | 0—7—9 |
| 5. 36" | ,, | ,, | 0—6—3 |
| 6. 32" | ,, | ,, | 0—5—6 |
| 7. 28" | ,, | ,, | 0—3—9 |
| ஈரிழை சாதா. | | | |
| 1. 36" | ,, | ,, | 0—9—3 |
| 2. 27" | ,, | ,, | 0—7—3 |
| 3. 36" ஈரிழை டிரில் சாதா | | | 0—10—3 |
| 5. 27" | ,, | ,, | 0—8—3 |

சாயம் போட்ட சாதா கதர் துணிகளுக்கு விலை நிர்ணயிப்பதில் பழைய விலை வித்தியாஸத்துடன் விலைகளை குறைத்துப்போட்டுக் கொள்ள வேண்டியது. 36—5—2 சாயத் துணிக்கு ஜதை ரூ 2—9—6 ஆக விற்க வேண்டியது. மற்றபடி சல்லை தினுசுகளுக்கும், அர்சு தினுசுகளுக்கும் இத்துடன் சேர்க்கப்பட்டதும் வியாபாரிகளுக்கு வினியோகிக்கப்பட்டதுமான ஜாபிதாப்படி விற்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த விலைகள் 1927-ஸு ஜனவரி மீ 1 உ முதல் அமுலுக்குக் கொண்டு வரத்தக்கதென்று ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

## ஸத்திய தரிசனம்,

### மகாத்மாகாந்தி சரித்திரம்.

3-ம் பாகம். அத்தியாயம் 5.

மகாத்மா காந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக பின்வருமாறு எழுதுகிறார்:—

நான் 1897-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் டர்பானில் இறங்கிய போது என்னுடன் மூன்று குழந்தைகளிருந்தன. ஒன்று என் சகோதரியின் பிள்ளை. அவனுக்கு 10 வயதிருக்கும். மற்ற இருவரும் என்னுடைய பிள்ளைகள். அவர்களுக்கு முறையே 9 வயதும் 5 வயதும் இருக்கும். அவர்களை நான் எங்கே படிக்க வைப்பது? இந்தக் குழந்தைகளை ஐரோப்பியக் குழந்தைகளுக்காக ஏற்பட்டிருந்த பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி யிருக்கலாம். ஆனால் அவர்களுடைய தயவினாலும் விதியை விலக்கியும் தான் சேர்த்துக் கொள்ளக் கூடும். அந்தப் பள்ளிக்கூடங்களில் எந்த "இந்தியக் குழந்தைகளையும் சேர்த்துக்கொள்வதில்லை. ஐரோப்பியர்களுடைய குழந்தைகளுக்காக கிறிஸ்தவப் பாதிரிமார்கள் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியிருந்தார்கள். அங்கு போதித்துவந்த கல்வி எனக்குப் பிடிக்கவில்லை யாகையால் என் குழந்தைகளை அங்கே அனுப்ப நான் இஷ்டப்படவில்லை. அங்கு ஆங்கிலத்தில் தான் போதிக்கமுடியும், அல்லது அபத்தமான தமிழிலாவது அல்லது ஹிந்தியிலாவதுதான் போதிக்கச் செய்யலாம். அதுவும் மிகுந்த சிரமப்பட்டுச் செய்ய வேண்டும். இதையும், இதர அசௌகரியங்களையும் என்னால் சகித்துக் கொள்ள முடியாது நானே அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க முயற்சி செய்தேன். ஆனால் கிரமமாக அதைச் செய்ய முடியவில்லை. குஜராத்தி உபாத்தியாயர் கிடைக்கவில்லை.

என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. என்னுடைய இஷ்டப்படி சொல்லிக் கொடுக்கக் கூடிய ஆங்கில உபாத்தியாயர் தேவையென்று விளம்பரஞ் செய்தேன். அவரைக் கொண்டு கிரமமாக சிறிது நேரம் சொல்லிக் கொடுக்கச் செய்து எனக்கு ஒழிந்த நேரங்களில் என்னாலானதைச் சொல்லிக் கொடுக்கலாமென்று நினைத்தேன். கடைசியாக மாதம் 7-பவுன சம்பளத்தில் ஒரு உபாத்தியாயினியை நியமித்தேன். சிறிது காலம் அவர் சொல்லிக் கொடுத்துவந்தார். இருந்தாலும் எனக்கு அது பிடிக்கவில்லை. என்னுடன் சம்பாஷித்துவந்த நேரங்களில்தான் குஜராத்தி பாஷையிலேயே பேசிவந்ததால் அவர்கள் அதன் மூலமாகக் கொஞ்சம் அந்த பாஷையைக் கற்றுக் கொண்டனர். சிறிய குழந்தைகளைப் பெற்றோர்களிடமிருந்து பிரித்து விடக்கூடாதென்று அந்தக் காலத்தில் கூட நான் நினைத்திருந்ததால் இந்தியாவிற்கு அவர்களைத் திருப்பி அனுப்பிவிட இஷ்டப்படவில்லை. ஒழுங்காக வீடுகளில் கற்றவரும் கல்வியை சாப்பாட்டு விடுதிகளிலிருந்து கொண்டு பெற முடியாது. ஆகையால் குழந்தைகளை என்னிடமே வைத்துக் கொண்டு விட்டேன். என்னுடைய மருமகனையும், என்னுடைய மூத்த குழந்தையையும் இந்தியாவிற்கு அனுப்பினேன். அது பிடிக்காததால் திரும்பத் தருவித்து விட்டேன். பிறகு என்னுடைய மூத்த பிள்ளை யுவப்பிராயமடைந்ததும் என்னை விட்டுப் பிரிந்து இந்தியாவிற்கு வந்து ஆமதாபாத்தில் ஒரு கலாசாலைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கொண்டான். நான் சொல்லிக் கொடுத்ததில் என்னுடைய மருமகனுக்குத் திருப்தி ஏற்பட்டிருந்ததென்பது என்னுடைய தோற்றம். ஆனால் துரதிஷ்ட வசத்தினால் அவன் சிறிது காலம் அசௌக்கியமாக இருந்து நல்லபருவத்தில் இறந்து போய் விட்டான். என்னுடைய குழந்தைகளில் பாக்கி மூன்று பேர்களும் பொதுப் பள்ளிக்கூடங்களுக்குச் சென்றதே கிடையாது. தென்னாப்பிரிக்காவில் ஸத்யாக்ரஹம் செய்தவர்களுடைய குழந்தைகளுக்காக நானே ஏற்படுத்தியிருந்த பாடசாலையில் சிறிது அவர்கள் படித்துவந்தனர்.

(பின் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

இந்தப் பரீக்ஷைகள் எல்லாம் உபயோகப்படவில்லை. நான் விரும்பிய அளவு என்னுடைய குழந்தைகளுடைய கல்விக்காக என்னால் செலவிட முடியவில்லை. குழந்தைகள் விஷயத்தில் நான் போதிய கவனம் செலுத்த முடியாததாலும், வேறு தவிர்க்க முடியாத காரணங்களாலும் அவர்களுக்குச் சரியாக வித்தியாப்பியாஸம் ஏற்படும்படி செய்ய முடியாமற் போய்விட்டது. அவர்களுக்கு என்னிடத்தில் அந்தக் குறை இருந்து வருகிறது. அவர்கள் ஒரு எம். ஏ. பட்டதாரியையாவது, பி. ஏ. பட்டதாரியையாவது, மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறியவர்களையாவது சந்திக்கையில் தங்களுக்குப் படிப்பு இல்லாமற் போனதற்கு வருத்தப்படுகிறார்கள்.

இருந்தபோதிலும் அவர்களை நான் பொதுப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பியிருந்தால் அனுபவப் பள்ளிக்கூடத்திலா, பெற்றோர்களிடம் நெருங்கிப் பழகுவதால் ஏற்படும் பயிற்சியிலும், அவர்கள் சேர்ந்திருக்க முடியாமதன்றே இன்னமும் நான் அபிப்பிராயப்படுகிறேன். அவர்கள் விஷயத்தில் இப்பொழுது நான் கவலையற்றிருப்பது போல் அவர்களைப் பொதுப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பியிருந்தால் நான் கவலையற்றிருக்க முடியாது. இந்தியாவிலாவது, தென்னாப்பிரிக்காவிலாவது அவர்கள் என்னிடமிருந்து பிரிந்திருந்து கல்வி கற்றிருந்தால் இப்பொழுது அவர்களுக்கு இருந்து வரும் அடக்கமும் தேச கைங்கர்யம் செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் ஏற்பட்டிருக்காது. பொதுப் பள்ளிக்கூடங்களில் அவர்களுக்குப் பழக்கப்பட்டுள்ள வழிகள் என்னுடைய வேலைகளில் பெரிய இடையூறாயிருக்கும். ஆகவே அவர்களுக்காவது, எனக்காவது திருப்தியான அளவு சாதாரணக் கல்வியை அவர்களுக்குப் போதிக்க நான் ஏற்பாடு செய்யாதபோதிலும் என்னுடைய அனுபவங்களைக் கவனிக்கையில் நான் செய்ததே நியாயமென்று நான் நினைக்காமலிருக்க முடியவில்லை. அவர்களைப் பொதுப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாததற்கும் நான் இப்பொழுது வருத்தப்படவில்லை. என்னுடைய மூத்த பிள்ளையிடம் இப்பொழுது காணப்படும் சில துர்க்குணங்களுக்கு பால்யத்தில் நான் ஒரு கட்டுக்குட்படாததன் பலனென்றே நான் கருதுகிறேன். என்னுடைய வாழ்வில் அந்தப் பாகத்தை அரைப் படிப்பு படித்த காலமென்றே நான் கருதுகிறேன். என்னுடைய மூத்த பிள்ளையின் பருவகாலத்தில் நான் இவ்விதமிருந்து வந்ததில் அநுபவமின்மையால் அது நடக்கும் காரியமென்பதை அவர் உணராமல் அந்த ஒழுக்கங்களை அப்பியசித்துக்கொண்டு விட்டார். அந்தக் காலந்தான் என்னுடைய ஜீவிய வாழ்க்கையில் உத்தமமான காலமென்றும், இப்பால் ஏற்பட்ட மாறுதல் அறியாமையின் பலனென்றும் அவர் நம்பி விட்டார். அவர் அவ்விதம் நினைக்க இடமில்லாமலுமிருக்கவில்லை: பால்யத்தில் இருந்து வந்த வழியே சரியானதென்றும், இப்பால் என்னிடம் அகட்டுத்தனம் குடி கொண்டு விட்டதென்றும் அவர் ஏன் நினைக்கக் கூடாது. கலாசாலைகளில் சரியான படிப்பை என்னுடைய குழந்தைகளுக்குச் சொல்லிவைத்திருந்தால் என்ன கெடுதல் ஏற்பட்டிருக்கப்போகிறதென்றும், ஏன் அவர்களுடைய இறகை நான் வெட்டியிருக்க வேண்டுமென்றும் அவர்கள் பட்டங்களைப் பெற்று தங்களுக்கு இஷ்டமான தொழில்களைத் தேடிக்கொள்ள நான் ஏன் விட்டிருக்கக் கூடாதென்றும் பல நண்பர்கள் அடிக்கடி என்னைக் கேட்கிறார்கள்.

இந்தக் கேள்விகளில் ஸத்திருக்கிறதென்று நான் நினைக்கவில்லை. நான் பல மாணவர்களுடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். எனக்குப் படிப்பு விஷயத்தில் இருந்துவரும அபிப்பிராயங்களைப் பிற குழந்தைகளுக்குச் சொல்லி, அதன் பலனைப் பிரத்தியக்ஷத்தில் பார்த்திருக்கிறேன். என்னுடைய குழந்தைகளுடைய பால்யப் பருவத்தில் பள்ளிக்கூடங்களில் கல்வி பெற்றுவந்தவர்கள் பலரிருக்கிறார்கள். அவர்கள் என்னுடைய பிள்ளைகளைவிட எவ்விதத்திலும் உயர்ந்தியானவர்களாக இருக்கிறார்களென்றாவது, அவர்களிடமிருந்து என்னுடைய பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயம் ஏதாவது இருக்கிறதென்றாவது நான் நினைக்கவில்லை. ஆயினும் நான் செய்து பார்த்த பரீக்ஷைகளின் பலன் இன்னும் கர்ப்பத்தில் தானிருந்து வருகிறது. வீட்டில் ஒரு ஹத்திற்குட்பட்டுப் போதிக்கும் கல்விக்கும், பள்ளிக்கூடத்தில் போதிக்கும் கல்விக்கும் உள்ள வித்தியாசத்தையும், பெற்றோர்களுடைய வாழ்க்கை முறையில் ஏற்படும் மாறுதல்களால் குழந்தைகளுடைய புத்திப்போக்கில் மாறுதல் ஏற்படுவதையும் நாகரீக முறையின் உணர்ச்சியை ஆராய்ச்சி செய்பவர்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகவே இந்த விஷயத்தை நான் இங்கு பிரஸ்தாபித்தேன். ஸத்தியத்தை நாடி அலைபவர் அந்த வேலையில் எவ்வளவு பரீக்ஷைகள் செய்து பார்க்க வேண்டியிருக்கிறதென்றும், சுதந்திர தேவி எத்தனை தியாகங்களை விரும்புகிறாளென்றும் மெய்ப்பிக்க வேண்டுமென்பதும் என்னுடைய உத்தேசம். நான் தன் மதிப்பை மறந்து, இதர குழந்தைகளுக்குக் கிடைக்க முடியாத கல்வியை என்னுடைய குழந்தைகள் பெறுவதில் நான் திருப்தியடைந்திருந்தால், அவர்களுக்குச் சாதாரணக் கல்வி கிடைத்திருக்கும்படி செய்திருக்கலாம். ஆனால் அந்தக் கல்விக்குப் பதிலாக சுதந்திரத்திலும் தன்மதிப்பிலும் அவர்களுக்கு நான் புகட்டிய ஞானத்தை அவர்கள் அடைய முடியாமற் போயிருந்திருக்கும். சுதந்திரம் வேண்டுமா கல்வி வேண்டுமாவென்ற கேள்வி ஏற்படுகையில், கல்விக்கு சுதந்திரமே ஆயிரம் மடங்கு விசேஷமான தென்பதை ஒப்புக்கொள்ளப்படுமென்பதில் சந்தேகமில்லை. அடிமைத் தனத்திற்கு ஆஸ்தான பீடங்களாகிய பள்ளிக்கூடங்களிலிருந்தும், கலாசாலைகளிலிருந்தும் வெளி வந்துவிட வேண்டுமென்றும், அடிமைச் சங்கிலியை இழுக்கும் கல்வியை விடப் படிப்பில்லாமல் கற்களை உடைப்பது மேலென்றும் நான் 1920-ம் வருஷத்தில் சொன்ன யோசனையைக் கேட்ட மாணவர்கள் என்னுடைய உபதேசத்திற்குக் காரணமின்னதென்பதை இப்பொழுது உணருவார்களென்று நம்புகிறேன்.

---

## நாடார்களும், நாடார் மஹாஜன சங்கமும்.

(தொடர்ச்சி)

ஒரு சங்கிலி தன் பெலவீனமான கணுவைவிடப் பல முள்ளதல்ல என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. சாதாரணமாக ஜாதியிலும் படித்தவர்களும் படியாதவர்களும் ஏழைகளும் ஐசுவரியவான்களும் கூலிகளும் வியாபாரிகளும் சமுசாரிகளும் கலந்தே இருப்பார்கள். அப்படியிருக்க படித்தவர்கள் படியாதவர்களையும் ஐசுவரியவான்கள் ஏழைகளையும் நிலச்சுவான்கள் கூலிகளையும் முறையே தங்களுடைய ஜாதியைச் சேர்ந்தவர்கள் அல்லவென்று கூறி தங்களைத் தாங்களே பெரியவர்களாக்கிக்கொள்ள நினைப்பார்களானால் அந்த ஜாதி எப்படி விர்த்தியடைய முடியும்? மகன் படித்து பெரிய உத்தியோகத்துக்கு வந்தால் தகப்பன் தன்னைப் போல் உடுத்திக்கொள்ளவில்லையென்றோ, இங்கிலீஷ் படித்தவர்களோடு உட்கார்ந்து சம்பாஷிக்க யோக்கியதையற்றிருப்பதைப் பற்றுச்சேர்ந்தோ தம் முடைய வீட்டுக்குத் தகப்பனை வராமலிருக்கும்படி எச்சரிக்கை செய்தும் ஓர் கால் வந்தாலும் மற்றவர்கள் கண்ணுக்குத் தெரியாத மறைவாய் இருக்கவும் மகனிடம் தவறிவெளிவந்துவிட்டாலோ யாரோ ஊரிலிருந்து செய்திகொண்டு வந்த கூலிக்காரன் என்று பிறருக்குத் தெரிவிப்பதான வழக்கம் சிலவிடத்தில் உண்டென்று கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்திருக்கிறோம். இப்படிப்பட்ட மனிதர் ஜாதியில் பிறந்திருப்பினும் அச்ஜாதிக்கு இவர்கள் பெருமை தருபவர்களா சிறுமை தருபவர்களா என்பது நாம் சொல்லவேண்டுவதில்லை. ஆயினும் மற்றவர்களைப்பற்றி நாம் எதுவும் சொல்ல இங்கு முற்படவில்லை. நம்மவர்களுக்குள் இப்படிப்பட்ட அற்பத்தனமான செய்கை எங்கேனும் உண்டா என்பதையே தேடிவிசாரிப்போம். தென்திசையில் கிராமக்காரன் என்றும் குடித்தனக்காரன் என்றும் ஓர் பிரிவு புராதனமாய் ஏற்பட்டிருக்கிறது. கிராமக்காரருடைய நிலத்தில் குடியிருப்பதற்காகவோ அவர்களுடைய நிலத்தைக்கட்டுக் குத்தகைக்கு வாங்கி சாகுபடிசெய்து லாபம் அடைவதாலேயோ அந்த கிராமத்தவருக்கு அவருடைய கிராமத்தில் குடியிருப்பவர் வருஷா வருஷம் ஓர் வருஷவருஷம்படியைக் கொடுப்பது வழக்கம். மேலும் கிராமத்துக்குரியவர்களிடம் இவர்கள் மதிப்பாயும் கண்ணியமாயும் நடந்து கொள்வதும் இயற்கையாயமைந்திருப்பதுமுண்டு. இதை ஒருவாறு ஜமீன் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கொப்பான நிலைமைக்கு ஒப்பிடலாம். இது நாடார்களுக்குச் சொந்தமான கிராமங்களில் மாத்திரமல்ல மற்றெல்லா ஜாதியாருக்கும் பாத்தியப்பட்ட கிராமங்களிலும் கிராமத்துக்குடையவருக்கு இவ்வித சலுகை காட்டப்பட்டே வருகிறது. என்றாலும் நாகரீகமும் அறிவும் விர்த்தியடைந்த ஒவ்வொருவரும் சுயாதீனத்துக்காகப் போராடிவரும் இந்நாட்களில் ஜமீன்களில் அனுஷ்டிக்கப்பட்டுவரும் ஷை வார ஒழுங்குகளை சீர்திருத்தியமைக்கப் பிரயத்தனம் செய்யப்படும்போது இந்திய சுதேசிய மன்னர்களின் யதேச்சாதிகாரத்தையே குறைக்கவேண்டுமென்று புகார் செய்யப்பட்டு வரும் இச்சீர்திருத்தம் பெருத்த நாட்களில் சில கிராமங்களில் சிலருக்குள்ள சொற்ப செல்வாக்கை அளவுக்கு மிஞ்சின பிரகாரம் உபயோகிக்கப்பார்ப்பதும் தம் கிராமத்தில் குடியிருக்கும் தம் சுய ஜாதியாரை இதர ஜாதியாரிலும் குறைவானவர்களாக மதிப்பதும் பெருமையான குணமென்றாவது பெருந்தன்மை என்றாவது கூறுதல் கூடுமா?

மதுரையிலும், திருநெல்வேலியிலும் தேவர்மார்களுக்கு பாத்தியப்பட்ட கிராமங்களும் ஜமீன்களும் இருக்கின்றன. ஆயினும் அப்படிப்பட்ட மிட்டாதார்களாவது ஜமீன்களாவது தங்களுடைய சுய ஜாதியாரை வேறு ஜாதியார் என்று புறக்கணித்துக்கூறுவதை நாம் என்றும் கேட்டதில்லை. இன்னும் பிள்ளைமார்பிராமணர்களுக்குச்சொந்தமான கிராமங்களிலும் கிராமத்தில் பங்கில்லாத அயலூர் பிள்ளைமார் ஐயர்மார் குடியிருந்தால் அவர்களிடம் எவ்வித விகற்பமும் பாராட்டாமல் சமஅந்தஸ்துடனேயேகூடி வாழ்கின்றனர். அந்நிய ஜாதியார்களிடத்தில் தான் அவர்கள் தங்களுக்குரிய கிராமச்சலுகையைப் பாராட்டிக்கொள்ளுகிறார்கள்.

ஆனாலும் நாடார்களுக்குச் சொந்தமான கிராமங்களில் இது தலைமாறிய பாடமாயிருக்கிறது. நாடார்கள் கிராமங்களில் குடியிருக்கும் மற்றெல்லா ஜாதியாருக்கும் மதிப்பும் சமத்வமும் சர்வசுதந்திரமுமுண்டு. அந்தகிராமத்தில் வந்து குடியேறியிருக்கும் சொந்த ஜாதியான ஏழை நாடார்களோ மிக்க அவமதிப்பாயும் அலக்ஷியமாயும் நடத்தப்படுகிறார்கள். கிராமத்தில் குடியிருக்கும் இதர ஜாதியார் மெய்ப்பக் கடமைப்பட்டிராத பல ஊழியங்களும் வரிகளும் சுய ஜாதியார் மேல் சுமத்தப்படுகிறது. இதுமட்டுமல்ல; அவர்கள் வேறு ஜாதியார் நாங்கள் வேறு ஜாதியார் என்றும்கூட வாய் கூசாமல் சொல்லிவிடுகின்றனர்: இதைக்கவனித்து வந்த இதர ஜாதியார் இப்போது இப்படிப்பட்ட பெரியாரை தங்கள் இருப்பிடங்களில் கூடியிருந்து வாயார இகழ்ந்து வயிறார கதைத்துக்கொண்டுகேலிக்கூத்தாட ஆரம்பித்திருக்கின்றனர். இதைக்கண்டு சகியாமலே இது விஷயமாய்ப் பத்திரிகைக்கு எழுத நேரிடும் படியான நிலைமை ஏற்பட்டது. ஏனென்றால் நாடார்மஹாஜன சங்கம் நம்மவர்களில், அறிவில்லாதவர்களும் படிப்பில்லாதவர்களும் எளியவர்களுமானவர்களையே விர்த்திக்குக்கொண்டுவரவும் அவர்களுக்குக் கல்வியறிவையும் கைத்தொழிலையும் வியாபார முறைகளையும் பரவச்செய்யவேண்டுமென்ற நோக்கத்துடனேயே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க ஒவ்வொரு கிராமத்திலும் பெரியார் சிறியாரை இத்தனை சேவலமாய் நடத்தி வைத்துவிட்டு மஹாஜன சங்கத்தில் போய் பெரிதும் சமது ஜாதிக்கநுகூலமான பிரசினைகளைப்பற்றிப் பேசுவதில் இத்தகைய எளிய ஜனங்கள் எவ்விதம் நம்பிக்கை கொள்ளமுடியும்? இன்னமும் அதிபூர்வீக சட்டப்படி கிராமக்காரனுயிராமல் இடையில் ஏதோ பணமும் செல்வாக்குமடைந்துள்ள நாடார்களாவது தம்போன்ற இதர நாடார்களான கிராமத்தாரல்லாதவர்களின் சுயாதீனத்திற்கும் முற்போக்குக்கும் ஒரு வகை சேதமில்லாமல் தாங்களும் பெரியகிராமக்காரராகிவிட்டதுபோல் நடித்து தம்மிலும் மெலியாரான தம் சுய ஜாதியாரையும் பெரியோர்களையும் முக்கிய தனவான்களைவிடக் கேவலமாயும் கோரமாயுமே நடத்திவரத்தலைப்பட்டு விடுகின்றனர். இது முக்கிய கூற்றிலும் பெருங்கூற்றாய் சொந்தக்காரராலும் அந்நியராலும் வெகு விபரீதமாய் வியாக்கியானம் பண்ணப்பட்டு வருகிறது.

இவ்வித சேவலங்களை வெளியிலுள்ளவர் கண்டு நம்மை ஏளனம்பண்ணக் கூடிய நிலைமைக்கு முற்றவிட்டுவிட்டது நம்மவர்களின் பெருப்பிசகாகும். நமது சங்கத்தின் நோக்கத்துக்கு இது முற்றும் மாறாகும். ஒரு சங்கிலி பெலனாயிருக்க விரும்பினால் எல்லாக்கணுவும் பலனாய்ச் செய்யப்படவேண்டும். அதுபோல நாம் ஓர் ஜாதியாராய் பலமுங் கண்ணியமும் அடையவிரும்பினால் நம்மில் பலவீனமான கணுவுக்கொப்பானவர்களை நம்மவர்களே தான் என்றெண்ணி அவர்கள் பால் அன்பும் அநுதாபமும் கொண்டு அவர்களையும் சீரும்சிறப்புமான ஓர் நிலைமைக்குக் கொண்டுவரப் பாடுபடவேண்டும். எந்த ஜாதியிலும் குடும்ப பரம்பரைக்கு மதிப்பு ஏற்பட்டேயிருக்கும். இதை நாம் பொதுஜன நன்மையின் பொருட்டு இக்காலத்தில் தியாகம் செய்ய ஏற்பட்டாலுங்கூட நமது பெருமைக்குக் கூடுதலேயன்றி குறைவாகமாட்டாது. இதனை ஞாபகத்தில் வைத்தும் உலகத்தில் மஹாத்மாகாந்திகள் சித்தரஞ்சன தாஸ் முதலியோர் செய்திருக்கும் பெரும் தியாகங்களை எண்ணியும் தீண்டாமையைப்போக்க வேண்டுமென்று தேசத்தில் நடக்கும் பிரசாரத்தை உத்தேசித்தும் பெரியோர்களான நாடார்கள் சிறியோரான நாடார்கள் எனப்பிரிவின்றி பொதுவாக நாம் ஓர் ஜாதியாராகவே மற்றவர்களால் மதிக்கப்பட்டு வருவதாலும் நாம் நம்மில் எளியவர்களும் கஷ்டப்பட்டவர்களுமானவர்களையும் நம்மைப்போன்ற ஓர் நிலைமைக்காவது கொண்டுவரவேண்டுமென்ற கருத்துடன் ஒவ்வொருவரும் உழைத்து நமது நாடார்மஹாஜன சங்கத்தின் நோக்கத்தைத் தோமஞ்சோறும் கொண்டு செலுத்திவருவோமாக.

D. B. S.

(தொடரும்.)

---

## கம்மபாலன்.

### தமிழ் மாதப் பதிப்பு.

பத்திராதிபர், R. வெங்கிடசாமி நாயுடு.

கிராம வாசிகளுக் கவசியமான முக்கிய விஷயங்கள் பண்டிதரால் வரையப்படுகின்றன. தென் ஜில்லாக்களில கம்ம ஜாதியப் பத்திரிகை இஃதொன்றே. வருட சந்தா ரூ 1—0—0. தான். விளம்பரங்களுக்குத்தக்க சௌகரியமுண்டு. மாதிரிப் பிரதி இனாம். கிராமப் பஞ்சாயத்துகளுக்கும், ஐக்கியசங்கங்களுக்கும், பாடசாலைகளுக்கும் வேண்டிய எல்லாவித புத்தக பாரங்களும், ரப்பர் ஸ்டாம்பு முதலியனவும் எம்மிடம் கிடைக்கும்.

R. வெங்கிடசாமி நாயுடு,
"கம்ம பாலன்" பத்திராதிபர்,
திருத்தங்கல், சாத்தூர் S. I. R.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection